விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 05 திங்கட்கிழமை (17.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 060



காணாமல் போன சிறுவர்களை மீட்கப் போராடும் அன்னை.

## வெள்ளை வானில் கடத்தப்பட்ட மகனை பீல்ட் பைக் அணியில் சீருடையில் கண்டேன்

### அம்பலப்படுத்தினார் தாயார்

(யாழ்ப்பாணம்)

வெள்ளை வானில் கடத்தப்பட்ட எனது மகன் இராணுவத்தினரின் பீல்பக் குறுப்புடன் சீருடையில் சென்றதை தான் கண்டதாக வயோதிபத் தாய் ஒருவர் ஜனாதிபதியின் விசேட ஆணைக்குழுவிடம் நேற்றைய தினம் சாட்சியமளித்து உண்மையை அம்பலப்படுத்தியுள்ளார்.

இனம்தெரியாத நபர்களினால் தமிழ் இளைஞர் யுவதிகள் வெள்ளை வானில் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட நிலையில் இராணுவத்தில் அவர்கள் இணைக்கபட்டுள்ளனரா? என்ற சந்தேகத்தை குறித்த வயோதிபத்தாயின்சாட்சியம் ஏற்படுத்தியுள்ளது.



கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலவடக்கில்காணாமற் போனவர்கள் தொடர்பில் உண்மையைக்கண்டறியும் நோக்குடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றுடன் தொடர்ந்து மூன்று நாட்கள் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றது.


யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆணைக் குழுவின் விசாரணைக்கு அதிகளவானவர்கள் வருகைதந்திருந்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க..

## இராணுவம் கொண்டு சென்ற மகன் எவ்வாறு காணாமல் போனான்!

### சாட்சியத்தில் தந்தை கேள்வி

(யாழ்ப்பாணம்)



என் கண் முன்னே இராணுவம் கொண்டு போன எனது மகனை நீங்கள் எவ்வாறு காணாமல் போனவர் என்று கூறுவீர்கள் எனஜனாதிபதி ஆணைக் குழுவிடம் தந்தையார் ஒருவர் சாட்சியப்பதிவுக்காக அழைக் கப்பட்ட வேளை கேள்வி எழுப்பியிருந்தார். யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவின் காணாமல் போனவர் தொடர்பிலான சாட்சியப்பதிவுகள் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே தந்தையார் ஒருவர் இவ்வாறு கேள்வி

20 ஆம் பக்கம் பார்க்க..

## இராணுவத்திடம் சரணடைந்த பொறுப்பாளர்கள் எங்கே?

### யோகியின் மனைவி கேள்வி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ரீதியாக போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் மீதும் இராணுவத்தினர் மீதும் குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வரும் நிலையில் இறுதிக் கட்ட போரில் முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பொறுப்பாளர்களில் ஒருவரான யோகரட்ணம் யோகி மாஸ்டர் உட்பட பல பொறுப்பாளர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்ததாகவும் அவர்கள் எங்கே என ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் நேற்றைய தினம் உறவினர்கள் கண்ணீர்மல்க சாட்சியமளித்துள்ளனர்.



வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளைமேற்கொள்ளவெனஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றையதினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சாட்சியமளிக்க வருகைதந்தவர்களில் கணிசமானவர்கள் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்து சாட்சியமளித்திருநதனர். அதே

19 ஆம் பக்கம் பார்க்க..

## ஆங்கிலேயர் ஆட்சி முதல் விசாரிக்கப்பட வேண்டும்

### கஜேந்திரகுமார் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் மட்டுமல்லாமல், ஆங்கிலேயர் இந்த நாட்டைவிட்டுச் சென்ற நாள் முதல் இன்று வரையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றிருக்கின்ற விடயங்களை விசாரிப்பதாக சர்வதேச விசாரணை அமைய வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வருடாந்த பொதுச்சபை கோரியிருக்கின்றது.

அந்த முன்னணியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் இந்தக் கூட்டம் நேற்று ஞாயிறன்று நடைபெற்றது.

ஐ.நா. மனித உரிமைப்பேரவை

20 ஆம் பக்கம் பார்க்க..

## சர்வதேச போர்க்குற்ற விசாரணை நவிபிள்ளையின் அறிக்கை கசிவு!

### பதிலளிக்க அரசுக்கும் அனுப்பிவைப்பு

(நியூயோர்க்)

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து அனைத்துலக விசாரணைக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கு உதவத் தமது பணியகம் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, வரும் மார்ச் மாத அமர்வில் இலங்கை குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார். இந்த அறிக்கை ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு, இலங்கை அரசாங்கத்தின் பார்வைக்காக, ஜெனிவாவில் உள்ள இலங்கை தூதுவர் ரவிநாத ஆரியசிங்க ஊடாக கடந்த வாரம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தை கடுமையாக குற்றம்சாட்டும் வகையிலான இந்த அறிக்கை, 20 பக்கங்களைக் கொண்டதாகவும், 74 குறிப்புகளை உள்ளடக்கியதாகவும் அமைந்திருந்தது.

இதுகுறித்துப்பதிலளிக்க இலங்கை அரசாங்கத்துக்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால்கடந்த 12-ம்

20 ஆம் பக்கம் பார்க்க..

## தி.மு.க மாநாட்டில் தீர்மானம் !

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மீதான போர்க் குற்றச்சாட்டுக்களை விசாரணை நடத்துவதற்கு சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்று வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவினால் தனித் தீர்மானமொன்று கொண்டு வரப்பட வேண்டும் என மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகத்தின் (தி.மு.க) திருச்சி மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் கச்சத்தீவில் மீன் பிடிக்க தமிழக மீனவர்களுக்கு உரிமையில்லை என்று இந்திய மத்திய அரசு கூறியிருப்பதைக் கண்டித்தும் மேற்படி மாநாட்டின் போது தீர்மான

19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸ் பொறுப்பதிகாரி சடலமாக மீட்பு

மேல் மாகாணத்தின் கல்கிசை பொலிஸ் புலனாய்வு பிரிவிற்கு பொறுப்பான அதிகாரி எம்.சமர கோனின் சடலம் அத்துருகிரிய பிர தேசத்தில் நேற்று மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட நிலையில் அவரது சடலம் அத்துருகிரிய பிரதேசத்தில் கொடகம-ஹோமாகம எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு பின்னாலுள்ள வயல் வெளியிலிருந்தே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவருடைய அலுவலக துப்பாக்கி சடலத்தின் காலுக்கு அடியில் கிடந்ததாகவும், அவருடைய தலையிலேயே துப்பாக்கி காயம் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அவர் வந்ததாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் சடலத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் தலைக் கவசம் உடைந்திருந்ததுடன் வெற்றிலைச் சுருள் மற்றும் ஞாயிறு பத்திரிகை அவ்விடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

# இனந்தெரியாத காய்ச்சலினால் கனடாவிலிருந்து வந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கனடாவிலிருந்து சொந்த ஊரான ஏழாலைப் பகுதிக்கு வந்த இளம் குடும்பஸ்தரான தம்பிராசா செந்தில் குமரன் (வயது 33) அடையாளப்படுத்த முடியாத காய்ச்சலினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையினர் தெரிவித்தனர்.

கனடாவிலிருந்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனது மனைவியுடன் தனது சொந்த ஊரான ஏழாலை வடக்கு முனியப்பர் கோவிலடிப் பகுதியில் வந்து தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் மேற்படி குடும்பஸ்தர் திடீர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த மேற்படி நபர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இவரது சடலத்தினை பிரேத பெட்டியில் வைத்து எங்களிடம் ஒப்படைத்த போது, பிரேத பெட்டியினை திறக்க வேண்டாம் என வைத்தியசாலையில் கடமை புரிபவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் இவருடைய மரணத்திற்கான உரிய காரணம் தெரிவிக்கப்படவில்லையெனவும் உறவினர்கள் தெரிவித்தனர். உயிரிழந்த நபர் திருமணமாகி ஒரு வருட காலம் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

பிரபல டொபி உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை. சம்பளம், கமிசன் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

வைத்தீஸ்வரன் (யாழ்ப்பாணம்)

(5615)

தொடர்பு: 0774744204

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
021 321 0815, 021 567 1532

## அனைத்து இடங்களுக்கும் விசேட பஸ் சேவை

(குருமன்காடு)

புகையிரத ஊழியாகளின் பணி பகிஷ்கரிப்பினைத் தொடர்ந்து பயணிகளின் வசதி கருதி வவுனியாவில் இருந்த அனைத்து இடங்களுக்கும் பஸ் வசதிகளை நேற்று முதல் ஏற்பாடு செய்துள்ளதாக வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரி.எஸ் இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த பஸ் சேவைகள் புகையிரத ஊழியாகளின் பணி பகிஷ்கரிப்பு நிறைவு பெறும் வரை இடம் பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-250)

## பொலிஸ் பாதுகாப்பில் மூன்று சிறுவர்கள்

கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லமொன்றிலிருந்து தப்பிச் சென்ற நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று சிறுவர்களை பொலிஸ் பாதுகாப்பின் கீழ் எதிர்வரும் 19ஆம் திகதி வரை சிறுவர் இல்லத்தில் தங்க வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தப்பியோடிய 3 சிறுவர்களை நேற்று முன்தினம் மாலை கண்டு பிடித்த பொலிஸார், அவர்களை நேற்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபால சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே நீதவான் மேற்கண்ட உத்தரவினைப் பிறப்பித்தார்.

மேற்படி சிறுவர் இல்லத்திலிருந்து 12 வயதுடைய மூன்று சிறுவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தப்பி ஓடியுள்ளனர். தொடர்ந்து பொலிஸார் நடத்திய தேடுதலின் போது, உருத்திரபுரம் மாணிக்க பிள்ளையார் ஆலய முன்றலில் வைத்து அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

மேற்படி மூன்று சிறுவர்களும் யாழ்ப்பாணம்-உருமபிராய், கிளிநொச்சி-உருத்திரபுரம் மற்றும் பரந்தன ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# இறப்புத் தொடர்பில் உறவுகள் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியில் கடந்த 11ம் திகதி உயிரிழந்த பெண்ணின் இறப்பு தூக்கில் தொங்கியதால் ஏற்பட்டதல்ல என உறவினர்கள் தெரிவித்தனர்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சி.கலைச்செல்வி என்பவர் கடந்த 11ம் திகதி ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அங்கு உயிரிழந்தார்.

அவரின் கழுத்தில் கயிற்றினால் இறுக்கப்பட்டது போன்ற அடையாளம் காணப்பட்டதால் அவர் தூக்கில் தொங்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவர் அவ்வாறு எதுவும் செய்ய முயற்சிக்கவில்லை எனவும், அவரது இறப்பில் சந்தேகம் நிலவுவதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மரண விசாரணைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு புதைக்கப்பட்டது. (எ-1)

## 22 ஆம் வருட நினைவலைகள்

தோற்றம் 18 - 06 - 1920



மறைவு 19 - 02 - 1992

அமரர் **இராசையா செல்வராசா**

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: துதியை 17.02.2014

பாசம் நிறைந்த எங்கள் அப்பாவே
ஆண்டுகள் பல கடந்தாலும்
பசுமை மிகு உங்கள் நினைவு
மாறாது எப்போதும்

"சுபதர்ஷன்"
சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் நினைவுகளுடன்..
குடும்பத்தினர்

(5590)



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
SRI NAGAPOOSHANI AMMAN KOVIL

பதிவு இல / Regd.No HA/5/JA/567

தொலைபேசி / Telephone — யாழ்ப்பாணம் / Jaffna — 021 321 3024, 021 320 7785

நயினாதீவு
Nainativu,
Sri Lanka.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் அறங்காவலர் சபை உறுப்பினர் தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோருதல்

- நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் அறங்காவலர் சபைக்குத் தெரிவு செய்யப்பட விரும்பும் 2012 தொடக்கம் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் மகாசபை உறுப்பினராக உள்ளவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை 2014.02.17-ம் திகதி தொடக்கம் கோவில் நிர்வாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2014.02.22-ம் திகதி பி.ப 5.00 மணிக்கு முன்பதாக கோவில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியுள் இடப்பட வேண்டும்.
- விண்ணப்பித்த ஒருவர் தனது விண்ணப்பத்தை மீளப் பெறுவதாயின் 2014.02.23-ம் திகதி பி.ப 5.00 மணிக்கு முன்பதாக எழுத்து மூலம் அறியத்தரவேண்டும்.
- அறங்காவலர் சபைத் தெரிவுக்கான வாக்கெடுப்பு 2014.02.27-ம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகி பி.ப 3.00 மணிவரை நடைபெறும் என்பதை 2014-ம் ஆண்டுக்கான மகா சபை உறுப்பினர்களுக்கு அறியத்தருகின்றேன்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
கோவில், அறங்காவலர் சபை
2014.02.16

ந.மோகனரூபன்
செயலாளர்.

(சி-6533)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளரும் வடமாகாண சபை உறுப்பினருமாகிய கௌரவ திரு. இ.அங்கஜன் அண்ணா அவர்களையும் பிரத்தியேக செயலாளர் திரு.ச.இராமநாதன் ஐயா அவர்களையும் மற்றும் அலுவலக இணைப்பாளர் திரு.சீலன் அண்ணா அவர்களையும் மனதார பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நீண்ட காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

உறுதிமொழி பேசினீர்கள் இராமநாதன் ஐயாவே!
பொன்சிரிப்போடு உன் அன்பின் அரவணைப்பால்
அரச வெற்றிடத்தில் எங்களை அங்கத்துவமாக்கினாய்
அங்கஜன் அண்ணாவே எட்டுத்திசைகளிலும்
உன்பணி தொடர்ந்திட நாம் என்றும் துணை நிற்போம்.

*பாராட்டி வாழ்த்துவோர் :*
12.02.2014 அன்று நியமனம் பெற்ற
மாவட்ட செயலக அலுவலக பணியாளர்கள்

01. அ.உதயரூபன் 02. சி.ரஜீவன் 03. பா.சசிகுமார்
04. நிஜந்தன் 05. க.கிசோகந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எது செல்வம்?

இரவு நேரம் ஒரு மன்னன் குதிரைமீதேறி நகர்வலம் வந்து கொண்டிருந்தான். அடிக்கடி அவன் இப்படி வருவது வழக்கம்.

நாட்டு மக்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கிறது? என்பதை நேரடியாகத் தெரிந்து கொள்வதறகாகத்தான் அம்மன்னன் இப்படி நகரத்தைச் சுற்றி வருவதுண்டு.

இப்படி வரும் போதெல்லாம் தவறாமல் அவனுடைய கண்ணில் படும் காட்சி ஒன்று உண்டு.

அதாவது ஒரு மரத்தடியில் எந்நேரமும் ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருப்பான்.

ஒவ்வொரு தடவையும் அவன் பிச்சைக்காரனை அதே இடத்தில் பார்ப்பதுண்டு.

அப்படிப் பார்க்கும் போதெல்லாம் மன்னனுக்கு ஒரு சந்தேகம்.

இந்தப் பிச்சைக்காரன் ஏன் தூங்குவதேயில்லை.

ஒருநாள் அந்த மன்னன் பிச்சைக்காரன் இருந்த அந்த மரத்துக் கருகில் கொண்டு போய் குதிரையை நிறுத்தி விட்டு கீழே இறங்கினான்.

அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து,

"நான் தினமும் இந்த வழியாக வந்து கொண்டிருக்கிறேன். உன்னையும் பார்த்துக் கொண்ட இருக்கிறேன். உன்னுடைய செயல் வியப்பாக இருக்கிறது."

"என்ன வியப்பு?"

"நீ தூங்கி நான் பார்த்ததேயில்லை. நள்ளிரவில் கூட நீ முழித்துக் கொண்டே இருக்கிறாய். நீ ஏன் தூங்குவதேயில்லை? இதுதான் என்னுடைய சந்தேகம்"

பிச்சைக்காரன் போல தோற்றமளித்த அந்தத் துறவி இதற்குப் பதில் சொன்னார்.

"காவல் காத்துக் கொண்டிருக்கிறேன்."

"காவலா?"

"ஆமாம், ஏதோ ஒன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. அதைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன்."

அரசர் அங்கும் இங்கும் திரும்பிப்பார்த்தார். பக்கத்தில் ஒரு பிச்சைப் பாத்திரம் தான் கண்ணில் பட்டது. வேறெதுவும் தெரிய வில்லை.

"என்ன தேடுகிறீர்கள்?" என்றார் துறவி

"உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது என்று தேடுகிறேன்" என்றார் அரசன்.

"அதற்கு ஏன் வெளியில் தேடுகிறீர்கள்? எனக்குக் கிடைத்தது எனக்குள்ளே இருக்கிறது. அதை இழந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் விழித்துக் கொண்டே இருக்கிறேன். தூங்கினால் அது பறிபோய் விடுமோ என்று பயமாக இருக்கிறது.

மயக்கத்தில் நான் அதை மறந்தாலும் மறந்துவிடுவேன். அதற்காகத்தான் இந்த விழிப்புணர்வு."

"எனக்கு ஒன்றுமே தெரியவில்லை" என்றார் மன்னர்.

"உள்ளே போக முடியவில்லை என்றால் உனக்கு எப்படி அது தெரியும்?"

"உன்னிடம் இருப்பது அவ்வளவு பெரிய செல்வமா?"

"ஆமாம்"

"அப்படியானால் என்னிடமும் நிறைய செல்வம் இருக்கிறது."

"உண்மை தான்"

"அப்படி இருக்கும் போது உனக்கும் என்ன வித்தியாசம்"

துறவி சொன்னார்...

"மன்னா! பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை.

கொஞ்சம் தான் வித்தியாசம். அது என்ன வென்றால்...

நீ வெளிப்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறாய்.

நான் வெளிப்பக்கமாக ஏழையாக இருக்கிறேன். நான் உள்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறேன். நீ உள்பக்கமாக ஏழையாக இருக்கிறாய்."

"அப்படியானால்?"

"நான் ஏழையாகவும் இருக்கிறேன், செல்வந்தனாகவும் இருக்கிறேன். அதேபோல் நீயும் ஏழையாகவும் செல்வந்தனாகவும் இருக்கிறாய். அதனால்தான் பெரிய வித்தியாசம் இல்லை என்றேன். நீ புறத்திலே செல்வந்தன். நான் அகத்திலே செல்வந்தன். அவ்வளவு தான்." துறவியின் இந்த விளக்கத்திலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா? விழிப்புணர்வோடு வாழ்ந்தால் நாம் எங்கே இருக்கிறோமோ அதுதான் சொர்க்கம். உறங்கிக் கொண்டே வாழ்ந்தால் நாம் இருக்கின்ற இடமே நரகம்.

இது ஞானிகள் வாக்கு.

நம்ம ஆள் ஒருத்தர்,

"எனக்கு தினமும் ஒருதடவை விழிப்புணர்வு வருகிறது." என்றார்.

பக்கத்திலிருந்தவர் "எப்பொழுது?" என்றார்.

"தினமும் தூங்கி எழுந்திருக்கும் போது"

தூங்கி விழிப்பது என்பது வேறு, ஞானிகள் சொல்லும் விழிப்புணர்வு வேறு.

அதை நாம் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. ஒரு நண்பர் வேடிக்கையாகச் சொன்னார்.

"நான் எப்பொழுதும் விழிப்புணர்வோடு தான் இருப்பேன். ஆனாலும் என்னுடைய சொர்க்கவாழ்க்கை இந்த மாதம் 24 ஆம் திகதிவரைக்கும் தான்" என்றார்.

"ஏன் அப்படி?"

"அன்றைக்குத்தான் எனக்குக் கல்யாணம்."

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை மீதான சர்வதேச விசாரணையை இந்தியா ஆதரிக்க வேண்டுமென வலியுறுத்துக!

## தமிழக அரசியல் கட்சிகளிடம் ராமதாஸ் கோரிக்கை

இலங்கை அரசு மீதான இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை இந்தியா தனியாக கொண்டு வர தமிழக அரசியல் கட்சிகள் பிரதமருக்கு நெருககடி கொடுக்க வேண்டுமென பா.ம.க நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தி யுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் நடத்தப்பட்ட இன அழிப்புப் போரில் ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்களை கொடூரமான முறையில் படுகொலை செய்த இலங்கை அரசு, அதன் செயலுக்காக சிறிதும் வருந்தியதாக தெரியவில்லை. மாறாக சர்வதேச அமைப்புகளையும், உலக நாடுகளையும் ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

அயர்லாந்து தலைநகர் டப்ளினில் 2010 ஆம் ஆண்டு நடந்த மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணையின் போது இலங்கையில் போர்க்குற்றங்கள நிகழ்த்தப்பட்டதும், ஜேர்மனியின் ப்ரேமன் நகரில் 2013-14ஆம் ஆண்டில் நடைபெற்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாய விசாரணையின் போது இலஙகையில் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதும் ஆதாரங்களுடன் உறுதி செய்யப்பட்டன. உலக மனிதவுரிமை அமைப்புகள் மூலம் நடத்தப்பட்ட வேறுபல விசாரணைகளிலும் இலங்கை அரசின் இன அழிப்பு நோக்கம் அம்பலமானது.

திரைமறைவு நடவடிக்கைகள் மூலம், அந்த தீர்மானங்களில் இருந்த 'ஐ.நா. கண்காணிப்புடன் கூடிய விசாரணை' என்ற வசகத்தை இலங்கை அரசே 'சுதந்திரமான, நம்பகமான விசாரணை நடத்த வேண்டும்' என மாற்றி நீர்த்துப்போகச் செய்தது.

இத்தகைய விசாரணையை நடத்த இலங்கை அரசுக்கு 2 ஆண்டுகள் அவகாசம் கொடுத்த பின்னரும் போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலையில் ஈடுபட்ட எவரும் தண்டிக்கப்பட வில்லை.

இத்தகைய சூழலில் இலங்கை மீதான குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்துவதை தவிர வேறு வழியில்லை என்று ஐ.நா. மனிதவுரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை, பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்காவும் இதற்கான தீர்மானத்தை எதிர்வரும் மார்ச் 3 முதல் 28 ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறும ஐ.நா.மனிதவுரிமைப் பேரவை கூட்டத்தில கொண்டுவர ஆயத்தமாகிறது. அதேநேரத்தல் சீனா, ஜப்பான், பாகிஸ்தான், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக களமிறங்கி தீர்மானத்தை வீழ்த்தப் போவதாக உறுதி ஏற்றுள்ளன.

இலங்கை அரசோ அமெரிக் கத் தர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கும்படி ஒருபுறம் இந்தியாவிடம் கெஞ்சிக் கொண்டே, இனொருபுறமதீர்மானத்தை ஆதரித்தால், இந்திய அமை திப்படை இழைத்த கொடுமைகள குறித்தும் விசாரணை நடத்த வலியுறுத்துவோம் என்று மிரட்டுகிறது.

இலங்கையின் இந்த மிரட்டல் இந்தியாவுக்கு விடப்படும் சவால் ஆகும். இதை இந்தியா அனுமதிக்கக் கூடாது என்பதுடன், ஈழத்தமிழர்களைக் கொன்ற இலங்கை அரசுக்கு சரியான பாடம்புகட்ட வேண்டும். இதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும. அவையாவன,

இலங்கையில் நடந்தது இன அழிப்பு போர் என்று அறிவிகக வேண்டும் இலங்கை அரசு மீதான போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை குற்றச்சா ட்டுக்கள் குறித்து நேர்மை யான, சுதநதிரமான சர்வதேச விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை இந்தியா தனியாகவோ அல்லது அமெரிக்கா உள்ளட்ட நாடுகளுடன் இணைந்தோ கொண்டு வர வேணடும். இது குறித்த அறிவிப்பை மத்திய அரசு உடனடியாக வெளியிட வேணடும், ஐ.நா. மனிதவுரிமைப் பேரவை யில் இடம்பெற்றுள்ள ஆசிய நாடுகளுடன் பேச! அவற்றின் ஆதரவை இலஙகைக்கு எதிரான தீர்மானத்திற்கு பெற்றுத் தர வேண்டும, இலங்கைப் பிரசசினையில ஆரம்பத்தி லிருந்தே அந்நாடடுககு ஆதர வான நிலைப்பாட்டையே எடுத்து வரும் மததிய அரசு மேறகண்ட நடவடிக்கைகளை தானாகவே மேற்கொள்ளும் என எதிர்பார்ப்பது அறியாமையாகவே இருக்கும.

எனவே, இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும்படி மத்திய அரசுக்கு தமிழக அரசியல் கட்சிகள் நெருக்கடி அளிக்க வேணடும் தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளின் தலைவர்களும், தங்களின அரசியல் நிலைப்பாடுகளை மறந்து, ஒரே குழுவாக டில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து இக்கோரக்கைகளை வலியுறுத்த முனவர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | .70 |
| பச்சைமிளகாய் | 110 | 140 | 60 |
| தக்காளி | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 |
| கோவா | 30 | 50 | 40 |
| கரட் | 70 | 100 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 60-100 | 100 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 60 | 90 |
| பாகற்காய் | 80 | 120 | 130 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 40 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 50 |
| பயற்றங்காய் | 140 | 100 | 150 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 30 | 50 | 70 |
| கறிமிளகாய் | 70 | 100 | 130 |
| முருங்கைக்காய் | 200-300 | 400 | 180 |
| போஞ்சி | 40 | 60 | 80 |
| கத்தரி தம்புள்ள | 60 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 40 | 40 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 40 |
| இராசவள்ளி | 60-90 | 100 | 70 |

# இராசி பலன்

17.02.2014
(மாசி 05, திங்கட்கிழமை )
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
துதியை முற்பகல் 9.05 மணிவரை
உத்தரம் முழுவதும்
இராகுகாலம் 8.03-9.33 மணிவரை
சுபநேரம் 12.33-2.03 மணிவரை
திருவள்ளுவர் குருபூசை

**மேடம்** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், கௌரவமான நாள்.

**இடபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்ட வேண்டி வரலாம்.

**மிதுனம்** பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கடகம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிங்கம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சுப செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், தொழில் நன்மை கருதிய பயணமொன்று இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சேமிப்பை உயர்த்தும் சிந்தனை மேலோங்கும், தொழிலை முன்னேற்றும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், போசன நன்மையுண்டு.

**தனுசு** குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கூடும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மகரம்** உங்களின் நிர்வாகத் திறமைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், கைவிட்டுப் போனதாக நினைத்த பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், போசன நன்மையுண்டு.

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமித்து கல்வி கற்றலை ஊக்குவிக்கும் என்டிபி 'ஷில்ப' சிறுவர் சேமிப்பு கணக்கு

பிள்ளையொன்றுக்கு வழங்கக்கூடிய மிகச்சிறந்த வெகுமதி கல்வியே என்ற நம்பிக்கையுடன், NDBயினால் அறிமுகப்படுத்தப்படடுள்ள புத்தம்புதிய சேமிப்பு திட்டமே ஷில்ப ஆகும்.

சிறுவர்களுக்கு வெகுமதிகள் மற்றும் விளையாட்டுப் பொருட்களை பரிசாக அளிக்கும் NDBஷில்ப தனித்துவமிக்க சிறுவர் சேமிப்புக் கணக்காகும். சிறுவர்களுக்கிடையில் சேமிப்பு பழக்கவழக்கத்தினை ஊக்குவிப்பதுடன், மழலை முதல் இளம்பருவ வயது வரை அவர்களுக்கு துணையிருந்து தமது கல்விச் செயற்பாடுகளை நோக்கி அவர்கள் முன்னெடுக்கும் ஒவ்வொரு அடிகளிலும் ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்குகின்றது. அதனடிப்படையில் NDBஷில்ப கணக்கானது NDB சிசு NDB கிட்ஸ், NDB டீன் என மூன்று வெவ்வேறு பிரிவுகளாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்குகள், பிள்ளைக்கும் பெற்றோருக்கும் ஆதரவாக இருந்து அவர்களின் எதிர்காலம் குறித்த கனவுகள் நனவாவதற்கு உறுதுணை வகிக்கின்றது

"NDB சிசு" கணக்கானது 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்கினை குழந்தை பிறந்தவுடன் ஆரம்பிக்க முடியும். குழந்தையானது, 2 முதல் 3 வயது என்ற மழலைப் பருவத்திற்குள் காலடியெடுத்து வைக்கையில் இக்கணக்கு மீதியானது ரூ. 2,500 ஆக உயர்வடையும் போது, NDB சிசு கணக்கானது, அப்பிள்ளையின் சிறந்த கற்றல் நடவடிக்கைகளுக்கு சிறப்பான அடித்தளத்தை உருவாக்கும், அக்குழந்தையின் முதலாவது புத்தகங்கள் மற்றும் முன்பள்ளிக் கற்றலுக்கு தேவையான அனைத்து விடயங்களையும அளிக்கும்.

குழந்தை 5 வயதை தாண்டியதும், இந்த சேமிப்புக் கணக்கானது NDB கிட்ஸ் கணக்காக மாற்றமடைவதுடன், குறித்த கணக்கில் பேணப்படும் கணக்கு மீதியின அடிப்படையில், தொடர்ந்தும் இப்பிள்ளையின் கற்றல் செயற்பாடுகளுக்கு தேவையான பாடசாலை உபகரணங்கள், பாடசாலை புத்தகங்கள், வகுப்பறைக் கற்றலுக்கு தேவையான விடயங்களை கொள்வனவு செய்வதற்கான வெகுமதி வவுச்சர்கள் ஆகியவற்றை அளித்தவாறு ஆதரவளிக்கும்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அதியுயர் சித்திபெறும் மாணவர்களுக்கு NDB கிட்ஸ் விசேட புலமைப் பரிசிலையும் வழங்கும். மேலதிகமாக NDB கிட்ஸ் கணக்கு உரிமையாளர்கள் மற்றும் அப் பிள்ளைகளின் பெற்றோர் ஆகியோர் வங்கியினால் "சேமிப்பு", "அன்பு", "விரயம்", "அறிவாற்றல்" ஆகிய கருப்பொருள்களின் கீழ முன்னெடுக்கப்படும் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளையும் பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் வங்கி ஊழியர் நியமனம்



மக்கள் வங்கிக்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட 600 ஊழியர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

இவர்களில் தெரிவு செய்யப்படட 50 ஊழியர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமனக் கடிதங்களை வழங்கினார்.

மேல்மாகாணம்மற்றும்தென்மகாணம்தவிர்ந்த ஏனைய மாகாணங்களில இருந்து தெரிவானவர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம. பௌஸி மற்றும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய ஆகியோர் உட்பட பாராளுன்ற உறுப்பினர்களும் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

# புத்தளத்தில் விமான நிலையம்

கல்பிட்டி சுற்றுலா வலயத்திற்கு சுற்றுலா பயணிகள் துரிதமாக செல்லும் வகையில் புத்தளம் மாவட்டத்தில் உள்ளூர் விமான நிலையம் ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பாலாவியில் இந்த விமான ஓடுபாதை நிர்மாணிக்கப்படும் என விமான போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஆரம்ப கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விமான போக்குவரத்து அதிகார சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்த மாத இறுதியில் இதற்குரிய நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் 2 வருட காலப் பகுதியில் நிர்மாண பணிகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தொலைத்தொடர்பு வர்த்தகத்தை கைவிடுகிறது டாடா

டாட்டா குரூப் தலைவராக சைரஸ மிஸ்ட்ரி சென்ற ஆண்டு பொறுப்பேற்ற பின்னர், தொலை தொடர்பு வர்த்தகத்திலிருந்து டாட்டா குரூப் விலகும் என்ற தகவல் பரவி வருகிறது. டாட்டா கம்யூனிகேஷன்ஸ் மற்றும் டாட்டா டெலி (Tata Communications and Tata Tele) என்ற இரு பெயர்களில், டாட்டா குரூப் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களைக் கொண்டுள்ளது. இந்த இரண்டையும் வோட போன் நிறுவனத்திடம் விற்பனை செய்திட பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

என்.டி.டி. டொகோமோ டாட்டா




டெலி நிறுவனத்தில் 26% பங்கினைக் கொண்டுள்ளது. டாட்டா கம்யூனிகேஷன் நிறுவனத்தில் அரசுக்கு 26% பங்கு உள்ளது. இவற்றை விற்பனை செய்திடும்பட்சத்தில், இந்த பங்குகளை டாட்டா குரூப் விலைக்கு வாங்கி, வோடபோன்வசம் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வோடபோன் டாட்டா டெலி நிறுவனத்தை வாங்கும் பட்சத்தில், அதிக எண்ணிக்கையில் வாடிக்கையாளர்களைக் கொண்ட நிறுவனமாக வோடபோன் இருக்கும். ஏர்டெல் நிறுவனத்தின் வாடிக்கையாளர் எண்ணிக்கையையும் இது தாண்டிவிடும்.




# ஜனவரியின் பணவீக்கம் 4.4%

2014 ஜனவரி மாதத்தில் பணவீக்கமானது 4.4 சதவீதமாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கபபட்டவாறான பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2014 ஜனவரியில் தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாக 4.7 சதவீதத்திலிருந்து 4.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது .

2013 ஜூனிலிருந்து வீழ்ச்சியடையும் போக்கினைக் கொண்டிருந்த ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2013 டிசெம்பரின் 6.9 சதவீதத்திலிருந்து 2014 ஜனவரியில் 6.5 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஜனவரியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் முன்னைய மாதத்தினைவிட 0.6 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தமைக்கு உணவல்லா வகையின் விலை 1.7 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், இது உணவு வகையின் விலைகளில் ஏற்பட்ட 0.9 சதவீத வீழ்ச்சியினால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது. உணவு வகையில் மலைநாட்டு காய்கறிகள், பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், உருளைக் கிழங்கு, எலுமிச்சம்பழம் மற்றும் பழங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

உணவல்லா வகையில் சுகாதாரம் (8.0 சதவீதத்தினால்) தொடர்பாடல (3.9 சதவீதத்தினால்) போக்குவரத்து (3.3 சதவீதத்தினால்) தளபாடம் மற்றும் வீட்டு உபயோகச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுப் பேணல (0.7 சதவீதத்தினால்) பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் (0.2 சதவீதத்தினால்) வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (0.1 சதவீதத்தினால்) மற்றும் ஆடைகள் மற்றும் காலணி (0.1 சதவீதத்தினால்) ஆகிய துணை வகைகளின் விலைகளில் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2013 டிசெம்பரின் 4.4 சதவீதத்திலிருந்து தொடர்ச்சியாக எட்டு மாதங்களாக வீழ்ச்சியடைந்து 2014 சனவரியில் 4.1 சதவீதத்தினையடைந்து கேள்வித் தூண்டல் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டமையினைப் பிரதிபலிக்கின்றது. 2014 ஜனவரியில் ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2013 டிசெம்பரின் 2.1 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

# அதிவேக வீதியின் புதிய பகுதிகள் திறப்பு

அதிவேக பெருந்தெருவின் கொட்டாவை கடுவலை பகுதி எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டளஸ் அழகப்பெரும இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இதேவேளை, காலி மற்றும் மாத்தறைக்கு இடையிலான பகுதி எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதிவேக பெருந்தெருவின் கொட்டாவை கடுவலை பகுதி எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம அறிவித்துள்ளார்.

இதேவேளை, காலி மற்றும் மாத்தறைக்கு இடையிலான பகுதி எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# விமான பராமரிப்பு வளாகம் மத்தலவுக்கு மாற்றம்

தற்போது கட்டுநாயக்காவில் தொழில்படும் விமான பராமரிப்பு வளாகத்தை மத்தல சர்வதேச விமான நிலையத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்தல சர்வதேச விமான நிலையத்தில், வேண்டிய அளவிலான இட வசதி உள்ளதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விமான போக்குவரத்து துறை அமைச்சின் செயலாளர் ரவீந்திர ருபேரு தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைய அதிக அளவிலான சர்வதேச விமானங்கள் மத்தல சர்வதேச விமான நிலையத்திற்கு செல்ல ஊக்குவிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மாற்றம் குறித்து சகல சர்வதேச விமான சேவைகளுக்கும் அறிவிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன், இலங்கைக்கு வரும் சரக்கு விமானங்களையும் மத்தல சர்வதேச விமான நிலையத்தில் இறக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர மத்தல சர்வதேச விமான நிலையத்திற்கு செல்லும் விமானங்களுக்கு விசேட சலுகையுடனான வசதிகளும் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுற்றுலாவினை மேற்கொண்டு இந்த விமான நிலையத்திற்கு வரும் வெளிநாட்டவர் களுக்கு விசேட சலுகையுடன் கூடிய வசதிகள் அளிக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,141.72 | 6,083.39 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,369.3 | 3,325.76 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 4,519.555

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): பிம்புத் பினான்ஸ்(41.60), மிரமர்(47.90), மொரிஷன்(185.00), ஷெமாநெக்(82.90), எஸ்எல்ரி(42.50).

சரிவைக் கண்ட பங்குகள்(ரூ.): செரன்டிப் இன்ஜி(89.60), சுவசி(15, 000.00), கூஜே( 61.60), பின்லே.கொழும்பு( 245.20), சிரஸ் லிசர்(1.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.37 | 132.25 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 214.27 | 220.40 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 175.06 | 180.79 |
| சுவிஸ் பிராங் | 142.92 | 148.17 |
| கனேடிய டொலர் | 116.84 | 120.79 |
| அவுஸ்திரேலிய டொலர் | 114.72 | 119.07 |
| சிங்கப்பூர் டொலர் | 101.57 | 104.88 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.29 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.62 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலமற்ற சேவையை பாராட்டுதலும் வாழ்த்துதலும்




வித்தியானந்தக் கல்லூரி தேசிய பாடசாலை முள்ளியவளைக்கு கல்லூரியின் பழைய மாணவனும் லண்டனில் வசிப்பவரும் லைக்கா மொபைல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளரும் ஞானம் நிதிய தலைவரும் தொழிலதிபருமாகிய அல்லிராசா-சுபாஸ்கரன் அவர்கள் எமது பாடசாலைக்கு ஐம்பது இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியையுடைய புதிய பேருந்தினை கடந்த 17.01.2014 அன்று அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அத்துடன் சுமார் மூன்று கோடி ரூபாவிற்கு மேற்பட்ட செலவில் பாடசாலை மாணவர்களுக்கான ஆண், பெண் விடுதிகளை நிர் மாணிப்பதற்கும் முன்வந்து இன்று இதற்கான அடிக்கல்லினையும் நாட்டி வைக்கவுள்ளார். இத்தகைய பெரும் மனங்கொண்ட கொடை வள்ளலுக்கு பாடசாலை சமூகமானது இதயம் நிறைந்த நன்றியை நவில்வதில் பெரும் மகிழ்வடைகின்றது. அத்துடன் தன்னலமற்ற பொது நோக்குக் கொண்ட இவரதும் குடும்பத்தினரதும் சேவை தொடர வாழ்த்தி நிற்பதுடன் இவர்கள் என்றென்றும் நீடூழி வாழ்கவென எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.



**பாடசாலை சமூகம்,**
**வித்தியானந்தக் கல்லூரி,**
**தேசிய பாடசாலை,**
**முள்ளியவளை.**

(6531)

**T.P.:- 0212223378**
**Fax:-0212227829**
**Email: valampurii@yahoo.com**

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 18 செவ் 7 ல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L / தனியார் கம்பனி சாரதி
தொ.இ: B/1106

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: 14 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / தனியார் நிறுவன சாரதி
தொ.இ: B/1107

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 24
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L, First in Commerce / பெயின்ரர் (இந்தியா)
தொ.இ: B/1109

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 24 ¾
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.E.A, MBA (Following) (லண்டன் PR)
தொ.இ: B/1110

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 32 செவ் 8 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L (UK – Student Visa)
எதிர்பார்ப்பு: UK – PR மட்டும், பிள்ளைகள் இல்லாத விவாகரத்து பெற்றவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/1577

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 1
கி.பா: 56உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1579

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 47உயரம்: 4'11"
தகைமை/தொழில்: A/L, தேசிய கல்வியியல் டிப்ளோமா/ஆசிரியர்
தொ.இ: G/1581

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 13 செவ் 1 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Dip. in Library Science / நூலக உதவியாளர்
தொ.இ: G/1586

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

யூனியன் வங்கி
இமේ දිවුණුවේ බැංකුව



உங்களுக்கு மேலும் சிறந்த சேவை வழங்குவதற்காக
யூனியன் வங்கியின்

**யாழ்ப்பாணம் கிளை**

இன்று புதிய கட்டடத்திற்கு
இடம்மாறுகின்றது

இல. 398, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 2224567

சி-6526

5th Elephant

ஃபிச் ரேட்டிங் BB(lka), RAM BBB/P3
யூனியன் பாங்க் ஒப் கலம்பு பி.எல்.சி. இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் வர்த்தக வங்கியாகும்.
தலைமை அலுவலகம்:
64, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 011 2 374 100
www.unionb.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலரின் பதவி நிலைகளை தமிழில் வெளிப்படுத்துங்கள்

(கரணவாய்)


கரவெட்டி பிரதேச சபையின் உடுப்பிட்டியில் அமைந்துள்ள உப அலுவலகத்திலுள்ள உத்தியோகத்தர்களின் மேசையில் ஆங்கில மொழியில் மட்டும் அவர்களின் பெயர்களும் பதவியும் போடப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.




இதனால் மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, தமிழ் மொழியில் பதவி நிலைகளை போட வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மும்மொழிக் கொள்கை பற்றி பேசப்படும் இக் காலத்தில் தமிழ் பிரதேசத்தில் ஆங்கில மொழியில் மட்டும் பெயரிடப்படுவது நல்லதல்ல என சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-9-60)



நன்றி:-ஜலன்ட்

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவில் நடைமுறைப்படுத்துங்கள்

## மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் 9 கோரிக்கைகள் முன்வைப்பு

வடக்கில் வாழும் தமிழ்மக்களின் அன்றாட நடவடிக்கைகளின் போது சிவில் உடைகளில் வருகை தந்து மக்களின் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு படையினர் விலக வேண்டும் என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அந்த அமைப்பினர் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

இதேவேளை மேற்படி ஊடகவியலாளர் சந்திப்பின்போது 9 அம்ச கோரிக்கைகளை யுடைய ஊடக அறிக்கை ஒன்றும் வெளி யிடப்பட்டது அந்த அறிக்கையில்,

கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்த யாழ்ப்பாணத்தின் வலி. வடக்கு உட்பட ஏனைய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் மன்னாரின் முள்ளிக்குளம், பள்ளிமுனை மக்களையும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்னமும் மீளக்குடியேற்றப்படாத மக்களையும் உடனடியாக மீளக் குடியேற்ற வேண்டும்

இதுவரை மீளக் குடியேறியுள்ள மக்களுக்கு போதுமான அடிப்படை வசதிகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மக்களின் காணிகளில் குடிகொண்டுள்ள இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்ற வேண்டும்.

மக்கள் சுதந்திரமாக கூட்டம் கூடுவதற்கும், தங்கு தடையின்றி மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்குமான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். மக்களின் அன்றாட நடவடிக்கைகளின் போது சிவில் உடைகளில் வருகை தந்து மக்களின் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு படையினர் விலக வேண்டும்.

இந்திய இழுவைப் படகுகளை நிரந்தரமாக தடுப்பதற்கான நடவடிக்கையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இதுவரை இந்திய இழுவைப் படகுகளினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும்.

விவசாயிகளின் உள்ளூர் உற்பத்திகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

காணாமல்போனோருக்கு மரணச்சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை உடன் நிறுத்தி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் உதவியுடன் காணாமல் போனோர் தொடர்பான உண்மைத் தகவல்களை வெளியிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை நிலைநாட்ட வேண்டும்.

யுத்தம் மற்றும் ஏனைய காரணிகளால் கணவர் மற்றும் தமது பிள்ளைகளை இழந்து தவிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொளள வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை வெகு விரைவில் நடைமுறைப்படுத்துமாறும் மிக ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம் ஆகிய கோரிக்கைகள் அந்த அறிக்கையில் முன்வைகக்கப்பட்டிருந்தன.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் முன்னாள் தலைவர் சுப்பிரமணியம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் இன்பநாதன், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-6)



வடமாகாண அமைச்சின் செயலாளர்களுடன் இவ் வருடம் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்துரையாடுவதை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# நிர்வாக சபை கூட்டம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் இறுதி நிர்வாக சபைக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட காரியாலயத்தில் இடம்பெறவுள்ளதாக மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வி.ஸ்ரீமேனன் அறிவித்துள்ளார்.

அத்துடன் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களினதும் தலைவர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-9-23)

# மஹோற்சவம்

திருநெல்வேலி பழங் கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சத் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கயிலாய வாகன வீதியுலாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (அ-2)

# திக்கம்வடிசாலையை பனைஅபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்க கொத்தணி முடிபு

(யாழ்ப்பர்ணம்)

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் நடத்தப்பட்டு வந்த திக்கம் வடிசாலை பனை அபிவிருத்திச் சபையுடன் மேற்கொண்ட ஒப்பந்த காலம் நிறைவடைந்தமையால் மீளவும் வடிசாலையை பனை அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தலைவர் சி.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இவ் வடிசாலையானது நிர்மாணிக்கப்பட்ட காலத்திலிருந்து முழுமையாக புனரமைக்கப்படவில்லை.

இவ்வாறு முழுமையாக திருத்துவதற்கு 35 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது.

இந்நிதியை எம்மால் பெற்றுக் கொள்ள முடியாமையால் இடையிடையே சிறு திருத்தங்களை மேற்கொண்டுள்ளோம்.

அத்தோடு, சாராயத்திற்கு அதிகரித்த வரி, உற்பத்தி செலவு அதிகரிப்பு, போதிய சந்தை வாய்ப்பின்மை போன்ற காரணங்களினால் நட்டத்திலேயே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் தேக்கி வைக்கப்பட்டுள்ள மதுசாரத்தினை உரிய வேளையில் சந்தைப்படுத்த முடியாத சூழலினால் கொத்தணி பெரும் நெருக்கடிகளுக்குள்ளாகியது.

இதனால் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களிற்கான கொடுப்பனவுகளை உடனுக்குடன் வழங்கப்படாமல் தற்போது 21 மில்லியன் 60 இலட்சத்து 7 ஆயிரத்து 26 ரூபா 93 சதம் செலுத்த வேண் டியுள்ளது.

வடிசாலையில், வடிப்பினை மேற் கொண்டு களஞ்சியப்படுத்துவதற்கான போதிய களஞ்சிய வசதிகளும் இருக்கவில்லை.

இதில் பணியுரியும் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்க முடியாத நிலையிலே காணப்படுகின்றது.

எனவே, மேற்குறித்த காரணங்களினால் பனை அபிவிருத்தி சபையுடன் கொத்தணி மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 உடன் ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளது.

இதன்படி கொத்தணி பணிப்பாளர் சபையும் பொதுச் சபையும் மேற்கொண்ட முடிவுகளுக்கு அமைய திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்தி சபையிடம் கையளிக்க முடிவு செய்துள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# ஓய்வூதிய நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

வடமராட்சி தெற்கு மேற்கு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 6 ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் எதிர்வரும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிதியத்தின் தலைவர் எஸ்.வீரசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ கலந்துகொள்ளவுள்ளார். (அ-4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை கோரி அமெரிக்க பிரேரணை வரலாம்

## நீதியமைச்சர் ஹக்கீம் ஆரூடம்

(கொழும்பு)

**பலவந்தமாக கடத்தி காணாமற்போகச்செய்தலை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக நடைமுறைப்படுத்துதல் என்ற விடயத்தை தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளடக்குமாறு வலியுறுத்துவதாக இந்தப்பிரேரணை அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**



இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தக் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றினை வலியுறுத்தி இந்தப் பிரேரணை அமைவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

உள்நாட்டில் விசாரணைப் பொறிமுறை ஒன்றினை அமைத்து உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் எனறு கடந்த ஆண்டு அமெரிக்கத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், நம்பகத்தன்மை வாய்ந்ததாக இந்த உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை அமையவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் நிலவுகின்றன.

எனவே, சர்வதேசப் பொறிமுறை ஒன்று அவசியம் என்று வலியுறுத்தப்படலாம்.

யுத்தப் பாதிப்புக்கள் தொடர்பாகவும், காணாமற் போனோர் தொடர்பாகவும் அரசாங்கம் கருத்துக் கணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் சர்வதேசம் திருப்தியடையும் வகையில் அந்த விசாரணைகள் இல்லை என்ற குற்றச்சாட்டுக்கள் நிலவுகின்றன.

இந்தக் கருத்துக் கணிப்புக்களில் குறைபாடுகள் இருப்பதாக முஸ்லிம் காங்கிரசும் ஒருபோதும் கூறவில்லை. ஆனால், யுத்தத்தினால் முழுக் குடும்பமும் உயிரிழந்திருந்தால் அந்த விபரம் உள்ளடககப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகி ன்றது.

அதேபோல், வெளிநாடுகளில் வசிக்கும் குடும்பங்களில் உயிரிழந்தவர்களின் விபரங்களை உள்ளடக்குவதற்கான சாத்தியக் கூறுகளும் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான விடயங்களைச் சுட்டிக்காட்டி, இந்த கருத்துக் கணிப்பு போதிய விபரங்களை உள்ளடக்கியதாக அமையாது என்ற ஒரு சந்தேகமும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் எழுப்பப்படலாம்.

இவ்வாறான குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினாலும், அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்த விடயங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டுவதற்கான ஓர் பொறிமுறையை உருவாக்கியுள்ளார்கள் என்பது ஓரளவுக்காவது இந்த விடயத்தில் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது என்றார். (அ-2)

## மரணதண்டனை கைதி திடீர் மரணம்

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்டு மகர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதிகாலையில் இந்த கைதி உடற்பயிற்சிகளை செய்து கொண்டிருந்த போதே திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

சிறைச்சாலை நிர்வாகிகள் குறித்த கைதியை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். எனினும் அதற்கு முன்னரே அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## இந்தியாவின் நிலைப்பாட்டை அறிய விரைந்தார் மிலிந்த

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகரான முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட புதுடில்லிக்கு சென்றுள்ளார்.

இந்தியாவின் மூத்த அரச அதிகாரிகள், ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளைச் சந்தித்து, அங்குள்ள நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கே அவர் குறுகிய காலப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு திரும்பியுள்ள அவர், தனது புதுடில்லி நிலைமைகள் பற்றிய மதிப்பீடுகள் குறித்து ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறுவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங், மற்றும் காங்கிரஸ் அரசியல் தலைவர்களான ராகுல் காந்திக்கு மிகவும் நெருக்கமான அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், காங்கிரஸ் பொதுச்செயலரும், முன்னாள் மத்தியப்பிரதேச முதல்வருமான திக்விஜய் சிங், பாஜகவின், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரும், நரேந்திர மோடிக்கு நெருக்கமானவருமான அருண் ஜேட்லி, மாநிலங்களவையின் துணை எதிர்க்கட்சித் தலைவர் ரவிசங்கர் பிரசாத் உள்ளிட் டோரை, மிலிந்த மொரகொட ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

2011ஆம் ஆண்டு மே மாதம், வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்ப ட்ட மிலிந்த மொரகோட, இதுபோனற பயணத்தை மேற்கொண்டு 16 மாதங்களுக்கு முன்னரும் இந்தியாவுக்கு சென்றிருந்தார் என சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-2)

# பூநகரி பிரதேசத்தில் காணியற்றோருக்கு அரை ஏக்கர் காணி வழங்க நடவடிக்கை

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

செயற்றிறன் மிக்க மக்கள் பிரதிநிதிகளுடன் அதிக தொடர்புகளை கொண்டுள்ள கிராமங்களே அபிவிருத்தியில் மேம்பாடு கண்டுள்ளன என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

முழங்காவில் அன்புபுரம் கிராம மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கிராம மக்களுடன் மேற்கொண்ட விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிராமங்களின் தேவைகளை செயற்றிறன் மிக்க மக்கள் பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கு தீர்வுகாணும் முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடக்கூடிய கிராம மட்ட அமைப்புகளைக் கொண்ட கிராமங்கள் இன்று பாரிய முன்னேற்றங்களை எட்டியுள்ளன.

மாறாக மக்கள் பிரதிநிதிகளுடன் தொடர்புகளை பேணுவதில் ஆர்வமற்று செயற்படுகின்ற கிராம மட்ட அமைப்புகளைக் கொண்ட கிராமங்கள் இன்றும் பல பிரச்சினைகளுடனும், மக்களின் பல தேவைகள் நிவர்த்தி செய்யப்படாத நிலையிலுமே காணப்படுகின்றன எனக் குறிப்பிட்ட அவர், முழங்காவில் அன்புபுரம் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் இன்றும் பல தேவைகளுடனும் பிரச்சினைகளுடனும் வாழ்ந்துகொண்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

மீள்குடியேற்றத்தின் பின் அன்புபுரம் கிராமத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும் மக்கள் எதிர்கொள்கின்ற வீட்டுத்திட்டம் உள்ளிட்ட சில முக்கிய தேவைகள் நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு தயாராகவுள்ளதாக தெரிவித்த அவர், கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 28 ஆயிரம் வரையான குடும்பங்களுக்கு மீள்குடியேற்றத்தின் பின்னர் வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியிருந்தது.

ஆனால், நாம் மேற்கொண்டு வந்த துரித செயற்றிட்டத்திற்கு அமைவாக தற்போது எட்டாயிரம் வரையான குடும்பங்களுக்கு மட்டுமே வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டியுள்ளது எனவும் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீடமைப்பு செயற்றிட்டத்திற்கு அமைவாக அன்புபுரம் கிராம மக்களுக்கும் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்.

இதேவேளை, இரண்டிற்கும் குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங்களை அமைத்துக் கொடுப்பது தொடர்பான செயற்பாடுகள் எவையும் இதுவரை நடைமுறைப் படுத்தப்படாத போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் அவ்வாறான குடும்பங்கள் அதிகமாக காணப்படுவதனாலும், அவ்வாறானவர்கள் தனித்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்தை எதிர்கொண்டிருப்பதனாலும் அவர்களுக்கும் விசேட செயற்றிட்டத்தின் அடிப்படையில் பெறுமதியான அரை நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம் அதற்கமைவாக அந்த செயற்பாடுகளும் விரைவில் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, முழங்காவில் மற்றும் அதனை அண்டிய கிராமங்களுக்கான குடிநீர் விநியோகத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

பூநகரி பிரதேசத்தில் நிலத்தடி நீரின் அளவு நாளாந்தம் குறைவடைந்து செல்கின்ற நிலையில் அதிகமாக கிணறுகளை அமைத்து நிலத்தடி நீரை உறிஞ்சி எடுக்கின்ற செயற்பாடுகளை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நிலத்தடி நீரின் அளவு குறைவடைவதனால் நாளாந்தம் விவசாய நிலங்கள் உவர் நிலங்களாக மாறிவருகின்ற அபாய நிலையை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

அதனைக் கருத்தில் கொண்டே நாம் சாத்தியமான பகுதியிலிருந்து நீரைப் பெற்று மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு அப்பகுதியில் காணிகளின்றி வசித்து வரும் குடும்பங்களுக்கு அரை ஏக்கர் விகிதம் குடியிருப்பு காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்ட அவர், விவசாய செய்கைக்காக அப்பகுதியில் காணப்படும் காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவுர் கூறினார். (அ-2)


கஜமுகன் டென்ரல் கிளினிக்

Dr.A. செந்தில்குமரன் அவர்களினால் நிரந்தரமாக பல் கட்டுதலும் கிளிப் போடுதலும் தற்போது நடைபெறுகின்றது.
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.
தொடர்பு: [illegible] 3838
021 4911366
(இலங்கை வங்கிக்கு அருகில்)





நிர்வாகம்

டென்ரல் கிளினிக்– அச்சுவேலி
தங்கம் வைத்தியசாலை, சந்நிதி வீதி,
Dr.A. செந்தில்குமரன் அவர்களால் சகல வாய், பல் சம்பந்தமான சிகிச்சைகள் தினசரி நடைபெறுகின்றது.
தொ.இல. 021 490 8898, 021 205 8595,
கதிரிப்பாய் வீதி, அச்சுவேலி.
(சி-6511)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாக இரத்தினம்



கடம்பவனம் எனும் கிராமத்தில் கண்ணன், ரங்கன் என்ற இரு மாடுமேய்க்கும் இளைஞர்கள் வசித்து வந்தனர்.

ஒரு நாள் மாலையில் ரங்கனுடைய மாடுகளில் ஒன்றைக் காணவில்லை. அதனால் அவன் கண்ணனைத் தன் மாடுகளை வீட்டிற்கு ஓட்டிப் போகச் சொல்லிவிட்டு, தான் தொலைந்து போன மாட்டைத் தேடிக் கொண்டு காட்டுக்குள் சென்றான். மாலை மங்கும் நேரத்தில், திடீரென ஒரு புலி எதிரே வர, ரங்கன் பயந்து போய் ஒரு மரத்தின் மீது ஏறிக் கொண்டான்.

சிறிது நேரத்தில், காட்டில் இருள் சூழ்ந்தது. இனி, தொலைந்து போன மாட்டைத் தேடிப் பயனில்லை என்று கருதிய ரங்கன் வீடு திரும்ப எண்ணிய போது, அவன் அமர்ந்து இருந்த பெரிய மரத்திற்குச் சற்றுத் தொலைவில் இருந்த ஒரு புதரில் இருந்து ஒரு நாகப்பாம்பு வெளியே வந்தது. அந்த நாகத்தின் தலையில் கண்ணைப் பறிக்கும் ஒரு இரத்தினக் கல் ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

சரசரவென வெளியே வந்த நாகம் ரங்கனிருந்த மரத்தையணுகித் தன் தலையில் இருந்த இரத்தினத்தை எடுத்து, மரத்தின் அடியில் இருந்த ஒரு பொந்தினுள் வைத்து விட்டு, சற்றுத் தள்ளிப்போய் இன்னொரு மரத்தினடியில் அமர்ந்ததும் திடீரென ஒரு மனிதனாக மாறியது. நாகதேவனைப் போல் தோற்றமளித்த அந்த மனிதன் மரத்தடியில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு தவம் செய்ய ஆரம்பித்தான். இதைக் கண்ட ரங்கன் இனியும் அங்கு இருந்தால் ஆபத்து எனக் கருதி, சத்தமின்றி மரத்திலிருந்து இறங்கி, ஊரை நோக்கி ஓடிப் போனான்.

மறுநாள் அதைப்பற்றித் தன் தோழன் கண்ணனடம் சொல்ல, கண்ணனின் விழிகள் வியப்பினால் விரிந்தன. அவன் ரங்கனை நோக்கி, "அடப்பாவி! சரியான முட்டாளாக இருக்கிறாயே! நாகரத்தினம் மட்டும் நம் கையில் இருந்தால், பாம்பு தீண்டிய பிறகு இறக்கும் நிலையில் இருப்பவர்களை நாம் காப்பாற்றி விடலாமே! நாம் அதையே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டால், நிறையப் பணம் சம்பாதித்துப் பணக்காரர்களாகி விடலாமே! சரி, சரி! இப்போது ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. இன்று இரவு அந்த இடத்திற்கு நாமிருவரும் சேர்ந்து செல்வோம். இன்றும் நேற்று நடந்தது போல் நடந்தால் நாம் இரத்தினத்தைத் திருடிக் கொண்டு வந்து விடலாம்!" என்று கூறினான்.

ரங்கன் வர மறுத்ததால் கண்ணன் மட்டும் தனியாக காட்டுக்குச் சென்றான். அவன் எதிர்பார்த்தது போலவே, அன்று நாகம் வந்தது. நாகதேவன் தீவிர தவத்தில் ஆழ்ந்து விட்டான் என்று தெரிந்ததும், கண்ணன் சத்தமின்றி கீழே இறங்கி, இரத்தினத்தைத் திருடிக்கொண்டு, ஊரை நோக்கித் திரும்பினான்.

மறுநாள் காலையிலேயே, அவன் கடம்பவனம் கிராமத்தை விட்டு வெகுதூரம் சென்று மற்றொரு பெரிய கிராமத்தை அடைந்தான். அந்த ஊரின் ஜமீன்தாரின் பெண்ணை ஒருநாள் நாகம் தீண்டிவிட, கண்ணன் தன்னிடம் உள்ள இரத்தினத்தைக் கொணடு அவளை உயிர் பிழைக்கச் செய்தான். அதனால் மகிழ்வுற்ற ஜமீன்தார் அவனுக்கு அந்த கிராமத்திலேயே வீடு அமைத்துத்தர, அவன் அந்த ஊரிலேயே தங்கிவிட்டான்.

வயல்களும், காடுகளும் நிறைந்த அந்தப் பிரதேசத்தில் தினமும் பலர் பாம்பு தீண்டி விஷமேறி அவனைத்தேடி வர அவன் அவர்களை குணப்படுத்தி வந்தான். காப்பாற்றப்பட்டவர்கள் 'அவனுக்குக் கொடுத்த பல வெகுமதிகளினால் அவனிடம் குவிந்த செல்வமும் ஏராளமாக ஆயிற்று.

கண்ணனால் வஞ்சிக்கப்பட்ட நாகதேவன் மறுநாள் காலையில் தவங்கலைந்து எழுந்த பிறகு தன் இரத்தினத்தைத் தேட, அது காணவில்லை. சுதேநதிரன் என்ற அந்த நாகதேவன் தன் இரத்தினத்தை இழந்து துடித்துப் போனான். எதிர்காலத்தில் இந்து என்ற ஒரு பெண்ணை மணக்க விரும்பி அந்த நாகதேவன் கட்டிய மணக்கோட்டை இடிந்து போயிற்று. அவன் அந்தப்பெண்ணை சந்தித்ததே மிகவும் சுவாரசியமான நிகழ்ச்சி!

ஒரு விவசாயியின் பெண்ணான இந்து பார்க்க மிகவும் அழகாக இருந்தாள். ஒரு நாள் அவள் தன் குடிசை வாயிலில் நெல்லைக் காயவைத்துவிட்டு, அவற்றைப் பறவைகள் கொத்தாமல் விரட்டிக் கொண்டு இருக்கையில், திடீரென அந்தப்பக்கம் ஓர் இளைஞன் வந்தான். இந்துவைக் கண்டதும் அவள் அழகில் மயங்கிய அவன், தன்னைத் திருமணம்செய்துகெள்ள அவளை வேண்ட, அவள் மறுத்தாள்.....

(தொடரும்)

## 02.2014 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

➢1788 - லெப்டினணட் போல் (Ball) என்பவன் சிட்னியில் இருந்து நோர்போல்க் தீவுக்கு கைதிகளைக் குடியேற்றச் சென்ற போது மனிதர்களற்ற லோர்ட் ஹோவ் தீவைக் கண்டு பிடித்தான்.

➢1854 - பிரித்தானியா ஒரேஞ்சு சுயாதீன நாட்டை விடுதலை பெற்ற நாடாக அங்கீகரித்தது.

➢1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: எச்.எல். ஹன்லி என்ற நீர்மூழ்கிக் கப்பல் யூஎஸ்எஸ் ஹவுசட்டோனிக் என்ற போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.

➢1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: தென் கரோலினாவின் கொலம்பியா நகரம் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் படைகள் வெளியேற்றத்தின் போது தீயிடப்பட்டது.

➢1867 -சூயஸ் கால்வாய் ஊடாக முதலாவது கப்பல் சென்றது.

➢1881 - இலங்கையில் இரண்டாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. நாட்டின் மொத்தத் தொகை 2,759,738, வட மாகாணத்தில் 302, 500, யாழ்ப்பாணத்தில் 40, 057 ஆகக் கணக்கெடுக்கப்பட்டது.

➢1933 - நியூஸ்வீக் முதலாவது இதழ் வெளிவந்தது.

➢1936 - சிறுவர்களுக்கான அதிமேதாவி மாயாவி முதற்தடவையாக வரைகதைகளில் தோன்றினார்.

➢1947 - வொயிஸ் ஒஃப் அமெரிக்கா தனது ஒலிபரப்புச் சேவையை சோவியத் ஒன்றியத்துக்கு விஸ்தரித்தது.

➢1979 - மக்கள் சீனக் குடியரசுக்கும் வியட்நாமுக்கும் இடையில் போர் ஆரம்பமாகியது.

➢1990 - இலங்கையின் ஊடகவியலாளர், மனித உரிமை செயற்பாட்டாளர் ரிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

➢1996 - பென்சில்வேனியாவில் இடம்பெற்ற சதுரங்க ஆட்டத்தில் காரி காஸ்பரொவ் ஐபிஎம்மின் டீப் புளூ கணினியை வென்றார்.

➢2000 - விண்டோஸ் 2000 வெளியிடப்பட்டது.

### பிறப்புகள்

➢1888 - ஓட்டோ ஸ்டேர்ன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர் (இ. 1969)

➢1927 - யுவான் அல்மெய்டா, கியூப புரட்சியாளர் (இ. 2009)

### இறப்புகள்

➢1956 - எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப்பாளர் (பி. 1891)

➢1970 - ஷ்மூவெல் யோசெப் ஆக்னன், நோபல் பரிசு பெற்ற இஸ்ரேல் எழுத்தாளர், (பி. 1888)

➢1986 - ஜே. கிருஷ்ணமூர்த்தி, தத்துவவியலாளர் (பி. 1895)

### மாயாவி (சித்திரக்கதை)



மாயாவி 1939 ஆம் ஆண்டு லீபாக என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு கற்பனைச் சித்திரக்கதையாகும். இது பெப்ரவரி 17, 1936 முதல் நாளாந்த செய்தித்தாளில் கறுப்பு வெள்ளை சித்திரக் கீற்றாக வெளியாகி மே 1936 தொடக்கம் ஞாயிறு வண்ணக் கற்றாகவும் வெளியாகியது. மாயாவி சித்திரக் கதைகளையும் தாண்டி தொலைக்காட்சி திரைப்படங்கள் என்பவற்றிலும் பயன்படுத்தப்பட்டுளளது.

மாயாவி "பெங்காலியா" எனும் அடர்ந்த வனப்பகுதியில் வசிப்பவர் ஆவார். அவ்வனத்தின் இயற்கை வளங்களையும், அங்கு வாழும் பழங்குடிகளையும் பல தலைமுறைகளாக காத்து வரும் காவலர் அவர். இவர் எப்பொழுதும் ஊதா நிற முகமூடி அணிந்திருப்பதால் இவரை முகமூடி வீரர் என்றும் அழைப்பர்.இவரது மனைவியின் பெயர் டயானா பால்மர் என்பதாகும்.

தமிழில் ராணி காமிக்ஸ் மூலம் மாயாவி எனும் கதை பாத்திரம் தமிழ் வாசகர்கள் மத்தியில் பெரும் பிரபல்யம் அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

ஆஹா என்ன அருமையான காட்சி! பெரும் பரந்த வெளிப் பாறைப் பகுதி. அதில் அந்த சிற்றோடை சுழித்துச் செல்லும் அழகே அழகு.

இதனை, அர்ஜுனா நதி என்று குறிப்பிடுகின்றனர். அடக்க ஒடுக்கமான பெண் போல சலசலத்துச் செல்லும் இந்த நதி மழைக் காலங்களில் பெரும் வெள்ளத்துடன் ஆர்ப்பரித்துச் செல்லுமாம்.

இந்த நதியில் எப்பொழுது வெள்ளம் வரும் என்று நிச்சயமாக கூற முடியாதாம். மழைக்காலம் அல்லாத மற்ற நேரங்களில் கூட காட்டில் எங்காவது மழை பொழிந்தால் சட்டென்று விநாடியில் நீர்பெருக்கு ஏற்பட்டு ஆற்றில் வெள்ளம் வந்துவிடுமாம். அடுத்த சில நிமிடங்களில் அந்த வெள்ளம் முழுவதும் வடிந்து சாதாரண நிலையில் காணப்படுமாம்.

சதுரகிரி மலை மீது ஏறி வரும் பக்தர்களும் சரி, மலையில் இருந்து கீழே இறங்கி வரும் பக்தர்களும் சரி, இந்த கோரக்கர் குகை பகுதியில் சற்று தங்கி நீராடிவிட்டு, உணவு உண்டு இளைப் பாறிச் செல்வார்களாம்.

சுமார் 40 வருடங்களுக்கு முன் இந்த அர்ஜுனா நதியில் வந்த பெரு வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட இழப்புக்களை விவரித்துக் கொண்டிருந்தார் அருகில் இருந்த பெரியவர் ஒருவர். வருடம் சரியாக நினைவில்லை. ஓர் ஆடி அமாவாசையன்று ஆயிரக் கணக்கில் கூடிய மக்களில் பெரும்பாலோர் இந்த நதிக்கரையிலிருந்த பாறையில் தங்கு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனராம்.

அதுவரையில் சிறிய ஓடை போல ஓடிக் கொண்டிருந்த அந்த நதியில் திடீரென பெருவெள்ளமாம். யாரும் எதிர் பார்க்காத மாயவெள்ளம். ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நூற்றுக் கணக்கானவர்களை அடித்துக் கொண்டு போய்விட்டது. எந்த உயிரையும் காப்பாற்ற முடியவில்லை. இறந்தவர்களின் சடலமும் கிடைக்கவில்லை.

இறந்தது மனித உயிர்கள் மட்டுமல்ல, காணிக்கையாக விடப்படுவதற்கு அழைத்து வந்த கால்நடைகளும் தான்.

வெள்ளம் வடிந்ததும் ஓரிரு உடல்களை மட்டுமே மீட்க முடிந்தது.



கோரக்கர் குகை லிங்கங்கள்

அத்தனை அபாயகரமான நதிதான் இந்த அர்ஜுனா. ஆகவே இந்தப் பக்கம் எப்ப வந்தாலும் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றார் அந்தப் பெரியவர்.

நதியைப் பார்த்தால் அப்படி அபாயகரமானதாகத் தெரியவில்லை. ஆனால் நடந்த சம்பவங்களைக் கேட்கும்போது நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஆகவே, எச்சரிக்கையாகவே நாங்கள் அந்த நதியின் மீது நடந்து சென்றோம்.

## ஆன்மீகம் 36

எங்களின் பின்னே வழிகாட்டி வந்த நண்பர் தியாராசரும் வந்து கொண்டிருந்தார். நாங்கள் வியப்புடன் பார்த்தோம். பாதி வழியில் உங்களை விட்டுச் செல்ல மனமில்லை. அதுதான் நாங்களும் உங்களுடனே வருகிறோம் என்றார்.

பரவாயில்லை வாருங்கள், அபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது. அதற்குள் அருவி நீரில் ஒரு சின்னக் குளியல் போட்டுவிட்டு வாருங்கள் என்று அந்தப் பெண்மணி தெரிவிக்கவே நாங்கள் குளியல் போடத் தயாரானோம்.

வரும்போதே பெரியவர் இந்த அர்ஜுனா நதியைப் பற்றி எச்சரிக்கை செய்திருந்ததால் வெகு ஜாக்கிரதையுடனே அதன் மீது நடக்க ஆரம்பித்தோம்.

ஆற்று நீர் ஒரே தடமாக இல்லாமல் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஓடிக்கொண்டிருந்ததால் குளிக்குமளவு நீர் இல்லை. ஆதலால் இவை ஒரே தொகுப்பாக வரும் வடக்குப் பகுதியில் குளிக்க முடிவுசெய்து, சரிவான உலர்ந்த பாறையின் மேல் கால் வைத்துச் சென்றோம்.... (தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



## 48 நிலவை நேசித்த நெஞ்சங்கள்

செம்மல் ஒரு முறை சோவியத் யூனியன் சென்றிருந்தபோது.... ஹோட்டல் பணிப்பெண் ஒருவர் செம்மலிடம் "நீங்கள் ராஜ்கபூர் நாட்டிலிருந்து வந்துள்ளீர்கள். அதனால் தான் தனி அக்கறை எடுத்து உங்களை கவனிக்கிறோம் என்று சொல்லி பசும்பாலுக்கு ஏற்பாடு செய்தாராம். (அந்த நாட்டில் கறந்த பால் கிடைப்பது அரிது. குளிரில் மாடு கறக்காது. அதை உஷ்ணப்படுத்திய அறையில்தான் வைத்துதான் கறக்க வேண்டும்)

இந்தியா காந்தி நாடு; நேரு நாடு; என்று சொல்வது மாதிரி ராஜ்கபூர் நாடு என்று சொல்வதிலும் வெளி நாட்டு மக்கள் மகிழ்ந்தார்கள்.


இதைப் பார்த்த செம்மல்... வெளி நாட்டில் ஒரு இந்திய நடிகனுக்குள்ள மரியாதைக்காகப் பெருமைப் பட்டார்.

தாயகம் திரும்பியதும், செம்மல் உடனடியாக கடிதம் எழுதி ராஜ்கபூரிடம் தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

ராஜ்கபூர் செம்மலுக்கு எழுதிய பதிலில்...

"நீங்கள் என் தந்தையின் விசிறி என எழுதி எனக்குப் போட்டியாக வந்துள்ளீர்கள். அதனால்தான் அவரது விசிறியாக இரண்டாம் இடத்துக்குப் போய்விட்டேன்" நன்றி.

"அத்துடன் என்னைப் பற்றி நீங்கள் பாராட்டி எழுதியது பெரிதல்ல. உங்களைப் பற்றி என்னிடம் ஆஸ்திரே



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், எம்.ஜி.ஆர்

லியாவில் [illegible] அரசியல் கட்சித் விட, ஆஸ்தி[illegible]

கண்டம். எனவே நீங்கள் பெரியவர்.

அதுமட்டுமல்ல நான் நடிகர். இயக்குநர், தயாரிப்பாளர், ஸ்டூடியோ சொந்தக்காரர்... சரி என்னிடம் இல்லாத இன்னொரு மேன்மை, உங்

என்னைவிட அதிகம் தெரிந்தவர் நீங்கள் A man who knew too much என்று எழுதியிருந்தார்.

சிங்கப்பூரில் ஒரு தையற்காரர். எம்.ஜி.ஆர் பேஷன் டெய்லர் என்று கடை நடத்தி வந்தார். செம்மல் படங்களில் அணியும் உடைகளைப் போன்றே தைத்து சிங்கப்பூர் மக்களிடையே பிரபலமானவர்.

அவர் செம்மலைக் காண இங்கு வந்தார். பார்த்தார்.

காணாததுதான் தெய்வம். நீங்க கண்கண்ட தெய்வம். தெய்வம்னா காணிக்கை செலுத்தணும். நானும் ஒரு காணிக்கை கொண்டு வந்திருக்கிறேன். ஒரு சூட் என்று கொடுத்தார்.

அளவு ஏது? நாயுடு கொடுத்தாரா? என்றார்" செம்மல்.

இல்லை. ஒரு உத்தேசம்தான். என் மனக் கண்ணால பாத்து வெட்டி தச்சேன் என்று போடச் சொன்னார். அத்தோடு இருபது ஆயிரம் பணம் கொடுத்தார்.

எதற்கு? எனக் கேட்க, உங்க பேர்ல உங்களைக் கேக்காம கடை நடத்துறேன். நூத்துக்கு ஒரு டாலர் வீதம் உங்க பங்குக்கு சேர்ந்த பணம். இதுவும் என் காணிக்கை என்றார்.

செம்மல் அதைத் தொட்டு முத்தமிட்டு, பெட்டியிலிருந்து ஐயாயிரம் ரூபாய் எடுத்து அதே தட்டில் வைத்து என் பேர்லே நடத்தி தோல்வியடையாமல் வெற்றியடைஞ்ச உங்க உழைப்புக்கு நான் தர்ற வெகுமதி... எடுத்துக்குங்க என்றார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானம் கடுமையாக இருக்கும்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தம்பலகாமம் பிரதேச மக்களை சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

(தம்பலகாமம்)

**அரசாங்கத்திடம் பிச்சையெடுத்து எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய நான் விரும்பவில்லை. மிக விரைவில் தமிழ் மக்களுக்கான தீர்வொன்று கிடைக்கும். அதன் பின்பு எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்வோம். அதுவரை பொறுத்திருங்கள் எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நான் அரசாங்கத்திடம் உங்கள் பிரதேச அபிவிருத்திக்கென உதவி கேட்கப் போனால் கோடிக் கணக்கான ரூபாவை கொட்டித் தர அரசாங்கம் காத்திருக்கிறது.

ஆனால் நான் அரசாங்கத்திடம் பிச்சையெடுத்து எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய விரும்பவில்லை. மிக விரைவில் தமிழ் மக்களுக்கென்று ஓர் தீர்வு வரும் அதுவரை பொறுத்திருங்கள்.

இலங்கை அரசாங்கத்துக்கெதிராக அமெரிக்காவினால் எதிர்வரும் மார்ச் மாதம் 26 ஆம் திகதி கொண்டுவரப்படவுள்ள மூன்றாவது தீர்மானமானது இலங்கை எதிர்பார்க்காத அளவுக்கு கடுமையாக இருக்கப் போகின்றது என்பது இலங்கைக்கு நன்றாகத் தெரியும். அந்த தீர்மானத்தை ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றுவதில் அமெரிக்கா பாரிய வெற்றியை அடையும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

அதன் காரணமாகவே இலங்கை அரசாங்கமானது வரவிருக்கும் தீர்மானத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக உலக நாடுகளிடம் ஆதரவு கேட்டு ஓடித் திரிகிறது. குறிப்பாக முஸ்லிம் நாடுகளின் ஆதரவைத் தேடி ஓடிக் கொண்டிருப்பதற்கு இதுவே காரணமாகும். எவ்வாறு இருந்தபோதிலும் அமெரிக்காவால் கொண்டு வரப்படவுள்ள மூன்றாவது தீர்மானத்திலிருந்து அரசாங்கம் தப்பித்துக் கொள்ள எடுக்கும் சகல வகையான முயற்சி களும் தோல்வியிலேயே முடியும்.

அமெரிக்கா எவ்வகையான தீர்மானத்தை எதிர்வரும் மார்ச் மாதம் கொண்டுவரப்போகின்றது என்பது எனக்கும் தெரியாது. யாரும் அறிந்தும் விட முடியாது. இருந்தபோதிலும் பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இவ்விடயத்தில் இலங்கைக்கு எதிரான கடுந்தன்மை கொண்டவையாக இருந்து வருகின்றன என்பது பற்றி என்னால் குறிப்பிட முடியும்.

அமெரிக்காவால் கொண்டு வரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா இம்முறை ஆதரிக்க இருக்கின்றது என்பது உண்மை. இந்தியா இவ்விடயத்தில் இலங்கைக்கு சார்பாக நின்றுவிட முடியாது.

எனவேதான் அமெரிக்காவின் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இம்முறை பிரித்தானியா, இந்தியா, கனடா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலமாக ஆதரிக்கவிருக்கின்ற நிலையில் இலங்கையரசாங்கம் தப்பித்துக் கொள்வதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

### பேச்சுவார்த்தை

முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்குமிடையில் ஒருசில உடன்பாடுகள் ஏற்பட்டிருந்தன. ஆனால் இதுவரை அந்த உடன்பாடுகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

நாம் எப்பொழுதும் ஒரு நம்பிக்கையான பேச்சுவார்த்தைக்கு தயாராகவே இருந்தோம். இருந்து வந்திருக்கின்றோம்.


ஆனால், அரசாங்கம் தான் பேச்சுவார்த்தைகளை நம்பிக்கை பூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் முன்னெடுக்க முயற்சிக்கவில்லை.

அரசாங்கமானது தான் கொண்டுள்ள பிடிவாத நிலைப்பாட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி ஆக்கபூர்வமான முறையில் செயற்ப்டுமாக இருந்தால் அவ்வாறான ஒரு முயற்சிக்குப் பூரணமான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராகவுள்ளோம் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கு முன்னர் நிபந்தனைகளை விதிக்கக் கூடாது எனக் கூறப்பட்ட செய்தியை நான் முற்றாக மறுக்கிறேன்.

எவ்வித முன்நிபந்தனையும் இடவில்லை. உடன்பாடு காணப்பட்ட சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் செயற்படாமையே பேச்சுவார்த்தை தடைப்பட்டு போனமைக்கான காரணங்கள் ஆகும்.

எனவே, நியாயமான முறையில் உடன்பாடு காணப்பட்ட விடயங்களிலும் வாக்குறுதிகளை அளித்த விடயத்திலும் அரசாங்கம் செயற்பாடுகளை நிறைவேற்றி பேச்சுவார்த்தைக்கு அழைக்குமானால் நாம் கலந்துகொள்ளக் காத்திருக்கிறோமென அவர் தெரிவித்தார். (அ-2)



திருமதி சிவகுமார் கயல்விழி யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிபதி ஆனந்தராஜா முன்னிலையில் சமாதான நீதவானாக கடந்த 11 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

# போக்குவரத்து அமைச்சர் மன்னிப்புக்கோர வேண்டும்

## ரயில் ஊழியர்களின் பொதுச்சேவை சங்கம்

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சரின் ஒருதலைப்பட்சமான தீர்மானத்தினால் புகையிரத சேவை வீழ்ச்சியடைந்துள்ளமை மற்றும் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களுக்காக அமைச்சர் புகையிரத பயணிகளான பொதுமக்களிடம் மன்னிப்புகோர வேண்டும்என அகில இலங்கை புகையிரத ஊழியர்களின் பொதுச் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

புகையிரத சாரதிகளின் வேலைநிறுத்தம் தொடர்பான பொறுப்பை போக்குவரத்து அமைச்சர் ஏற்கவேண்டும் எனவும் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

போக்குவரத்து அமைச்சர் தன்னிச்சையாக எடுத்த தீர்மானம் ஒன்றே இந்த வேலைநிறுத்தத்திற்கான அடிப்படை காரணம் எனவும், அமைச்சர் இதற்கு முன்னரும் இப்படியான ஒழுங்கற்ற தீர்மானங்கள் பலவற்றை எடுத்திருந்தார்.

இதன் காரணமாக நிர்வாக நடவடிக்கைகளை உரியமுறையில் முன்னெடுத்துச் செல்வதில் நெருக்கடியான நிலைமைகளை புகையிரதத்துறை அதிகாரிகள் எதிர்நோக்கியுள்ளனர்.

அமைச்சரின் ஒரு தலைப்பட்சமான தீர்மானத்தினால் புகையிரத சேவை வீழ்ச்சியடைந்துள்ளமை மற்றும் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களுக்காக அமைச்சர் புகையிரத பயணிகளான பொதுமக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கையை தொடர்ந்தும் அவதானிப்போம்-பிரிட்டன்

(கொழும்பு)

இலங்கையின் காணி மற்றும் அரசியல் உரிமைகள் குறித்து பிரித்தானியா தொடர்ந்தும் அவதானிக்கும் என்று அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அலுவலக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

இலங்கை அதிகாரிகள், நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றுக்கு தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.இதனை பிரித்தானியா தொடர்ந்தும் அவதானிக்கும் என்று ஹ்யூகோஸ்வையர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டமையானது வரவேற்கத்தக்க விடயம். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 80 வீத வெற்றி கிடைத்தது.

எனினும் வடக்கின் பொதுமக்கள் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு குறித்தும் கல்வித்துறையில் தலையீடு குறித்தும் பிரித்தானியா கவலை கொண்டுள்ளது.

எனவே, வடக்கில் இராணுவத்தை குறைத்து நீதியான தீர்வு ஒன்றை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று பிரித்தானிய பிரதமர் இலங்கைக்கு சென்றிருந்த போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியதையும் ஸ்வையர் நினைவுபடுத்தினார். (அ-ஜெ-11)

# தேங்காய்களை உடைத்து பிக்குகள் ஆர்ப்பாட்டம்

பிக்குகள் ஏற்பாடுகள் செய்த வித்தியாசமான எதிர்ப்பு நடவடிக்கை ஒன்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள அமெரிக்க தூதுரகத்திற்கு எதிரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜெனீவா மனிதவுரிமை ஆணைக்குழு மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிக்குகள் மற்றும் சிலர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பிக்குகளும் எதிர்ப்பில் ஈடுபட்டவர்களும் தேங்காய்களை வீதியில் உடைத்து எதிர்ப்பை வெளியிட்டதுடன் கங்காராம பெரஹெரவில் கலந்து கொண்ட யானைகளையும் அதில் அழைத்து வந்திருந்தனர்.

அமெரிக்காவுக்கு எதிரான இந்த எதிர்ப்பு நடவடிக்கையை கொழும்பு கங்காராம விகாரையின் விகாராதிபதி ஏற்பாடு செய்திருந்தார்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க தீர்மானம்

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் கூட்டத் தொடரின் போது இலங்கைக்கு எதிராகமுன் வைக்கப்படவுள்ள தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவாக வாக்களிக்க உள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக கட்ட யுத்தத்தின் போது பாரிய மனிதவுரிமை மீறல்கள் இடம் பெற்றதாக கூறி ஐ.நா. மனிதவுரிமை பேரவை இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் 2 தடவை கண்டன தீர்மானம் கொண்டுவரப் பட்டு நிறைவேற்றப்பட்டன.

இந் நிலையில் ஜெனீவாவில் ஐ.நா.சபையின் மனிதவுரிமை பேரவை கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

அதில் இலங்கை மீது அமெரிக்கா 3ஆவது தடவையாக கண்டன தீர்மானம் கொண்டுவர முடிவு செய்துள்ளது. தற்போது அமெரிக்காவுடன இணைந்து இங்கிலாந்து இத்தீர்மானத்தை கொண்டு வருகிறது.

இந்த தீர்மானத்தை தோற்கடிக்கும் முயற்சியில் இலங்கை முனைப்புடன் உள்ளது. கடந்த 2 முறையும் கொண்டுவரப்பட்ட கண்டன தீர்மானங்களை இந்தியா ஆதரித்தது. இந்த நிலையில் தற்போதும் அமெரிக்கா தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீர்மானத்தின் மீது ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் நடைபெறும் வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்க இந்தியா முடிவெடுத்துள்ளது.

இந்த தகவலை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-2)

# இராணுவமுகாம் காணிகளுக்கு காணி உறுதி வழங்கப்படும்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சகல பொலிஸ் மற்றும் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள காணிகளுக்கு காணி உறுதிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சு விடுத்த கோரிக்கையை அடுத்து நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இதனடிப்படையில் வன்னி பாதுகாப்பு படைகளின் தலைமையகத்திற்கு சொந்தமான 246 ஏக்கர் காணிகள் மற்றும் வடக்கில் புதிதாக ஸ்தாபிக்கப்படவுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணிகளுக்கு காணி உறுதிகளை வழங்கும் பணிகளை துரிதமாக ஆரம்பிக்க போவதாகவும் அமைச்சர் கூறினார். (அ-2)

# அதிகாரத்தை பகிர்ந்து நல்லிணக்கத்துடன் வாழவே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்

## மனோ கணேசன் சிங்கள புத்திஜீவிகளுக்கு எடுத்துரைப்பு

**(கொழும்பு) ஐக்கிய இலங்கைக்குள்ளான சுயமரியாதை சுயாட்சி தீர்வை வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் கருத்துகள் வலியுறுத்துகின்றதை சிங்கள புத்திஜீவிகள் புரிந்து கொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். மொறவட்டுவை கொரக்கான கிராமத்தில் சிங்கள ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டை பிரிக்காமல், ஆயுதத்தை தூக்காமல், அதிகாரத்தை பகிர்ந்து கொண்டு வாழ நாங்கள் தயார் என்றும், இது எங்கள் தாய்நாடு என்றும், வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன் மிகதெளிவான செய்தியை சிங்கள புத்திஜீவிகளுக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன் வடமாகாணசபை புலம் பெயர்ந்த தமிழர்களின் கைப்பொம்மையாக செயற்பட்டு தனித் தமிழீழத்தை நோக்கி பயணிக்கின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து, சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி அரசியல் செய்யும் தென்னிலங்கை கட்சிகளை வழிக்த கொண்டு வருவது உங்கள் பொறுப்பு என்றும் தென்னிலங்கை புத்திஜீவிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்குமக்களின்மக்கள்ஆணையை பெற்றுள்ள முதல்வரின் இந்த கருத்துகள் தெற்கில் தேசிய நல்லிணக்க கதவுகளை திறக்க வேண்டும். அவரது இந்த உரையை முழுமையாக நமது கட்சியின் ஊடக செயலகம் சிங்கள மொழியில் பெயர்த்து விநியோகிக்க வுள்ளது.

இந்த நாட்டில் உண்மை அமைதியை காண விரும்புவோர் என்ற முறையில் நீங்கள் இந்த முயற்சிக்கு உதவிட வேண்டும்.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் நற்செய்தியை கொண்டு செல்லும் நற்பணியை நமது கட்சி நீண்ட காலமாக செய்து வருகிறது. இதன்மூலம் இந்த நாட்டில் உண்மையான சமத்துவத்தின் அடிப்படையில் அமைதியைகாண உழைப்பது எங்கள் நோக்கங்களில் ஒன்று.

சிங்கள மக்களுடன் ஐக்கியமாக வாழவே நாங்கள் விரும்புகின்றோம். ஆனால் அந்த ஐக்கியம் சமத்துவத் துடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இதையே வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் வலியுறுத்துகிறார். இதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றவில்லை.

இதை காரணம் காட்டி கூட்டமைப்புக்கு அரசியல் தீர்வில் அக்கறை இல்லையென தென்னிலங்கை கட்சிகள் பிரசாரம் செய்கின்றன.

உண்மை அதுவல்ல. பேச்சுவார்த்தை செய்வதற்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்க இந்த அரசு தயார் இல்லை. எதைபற்றி பேசுவோம் என தெரியாமல் உட்கார அவர்கள் தயார் இல்லை.

இந்த நாட்டில் கடந்த 60 வருடங்களாகவே பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு சிங்கள தலைவர்களுடன், தமிழ் தலைவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்கள். ஒப்பந்தங் கள் கையெழுத்து ஆகியுள்ளன. அவை நடைமுறைபடுத்தப்படவில்லை. ஆனால், அந்த ஆவணங்கள் நம்மிடம் இருக்கின்றன.

இந்த அரசின் ஆட்சியிலும் சர்வ கட்சி மாநாடு நடத்தி, அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையில் ஒரு ஆவணம் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அது தவிர இந்த நாட்டு அரசியல் யாப்பில் 13ஆம் திருத்தம் இருக்கிறது.

இதை மேலும் அபிவிருத்தி செய்வோம் என இந்த நாட்டு ஜனாதிபதி, ஜநா செயலாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் உறுதி வழங்கியுள்ளார். இந்த ஆவணங்கள் எதையும் பேச்சுவார்த்தை மேசையில் வைக்க அரசாங்கம் தயார் இல்லை.

ஆரம்பத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிப்போம் என்று அரசு சொல்கிறது. இது படித்து, வளர்ந்து, பல்கலைக்கழகம் வந்துவிட்ட இளைஞனை மீண்டும் முன்பள்ளியில் சேர்ந்து அரிச்சுவடி படி என்று சொல்வதற்கு ஒப்பானதாகும்.

இதை நாம் ஏற்றுகொள்ள மாட்டோம். ஏற்றுக்கொண்டு மீண்டும் ஏமாறமாட்டோம். இதைதான் விக்னேஸ்வரன் சொல்கிறார். பேச்சுவார்த்தை ஆவணங்களை மேஜையில் இந்த அரசாங்கம் வைக்கட்டும்.

நானே யாழ்ப்பாணம் சென்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களை கொழும்பு அழைத்து வருகிறேன். நேர்மையான அரசியல் தீர்வு ஏற்பட்டு இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழும் நல்ல காலம் பிறந்தால் நான் அரசியலில் இருந்து விடைபெற்று என் சொந்த வாழ்வுக்கு திரும்பி விடுவேன்.

விக்னேஸ்வரனும் அப்படித்தான் என நான் நம்புகிறேன். அவர் அரசியல்வாதி அல்ல. இந்த நாட்டில் வடக்குக்கும், தெற்குக்கும் இடையில் உண்மையான இணைப்பு ஏற்படவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக நாங்கள் எல்லோரும் சேர்ந்து கொழும்பில் வாழ்ந்த அரசியல்வாதி இல்லாத அவரை அரசியலுக்குள் தள்ளிவிட டோம். இதை தயவு செய்து நீங்கள் புரிந்துகொள்ளுங்கள் என்றார். (அ-2)




யாழ்.மத்திய வங்கியின் அனுசரணையுடன் பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் யாழ்.வர்த்தக தொழிற்துறை வேளாண் மகளிர் ஒன்றியம் ஆகியன இணைந்து ஒருங்கிணைக்கும் அபிவிருத்திக் கடன் தொடர்பான கலந்துரையாடலொன்று அண்மையில் மானிப்பாய் மகளிர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் வட மாகாண பிராந்திய முகாமையாளர் எஸ்.கீர்த்திசிலன் மங்கல விளக்கேற்றுவதையும் மானிப்பாய் மகளிர் ஒன்றியத் தலைவர் எஸ்.ஜே.செல்வராஜா உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# பிரேரணைக்கு ஆதரவு வழங்கக்கோரி அமெரிக்கா பல நாடுகளுக்கு அழுத்தம்

## —திவயின தெரிவிப்பு—

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான போர்க் குற்றங்கள் தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள் ளது.

இந் நிலையில், பிரேரணைக்கு ஆதரவை பெறும் நோக்கில் அமெரிக்கா பல நாடுகளுக்கு அழுத்தங்களை கொடுத்து வருவதாக ஜெனீவா தகவல்கள் தெரிவிப்பதாக திவயின தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு ஆதரவான 14 நாடுகள் இம்முறை மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் பங்கேற்காது.

இதனால ஜெனீவாவில் உள்ள அமெரிக்க தூதுவர் பிரேரணையை பெற்றி பெறச் செய்வதற்காக ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் தூதுவர்களை அழைத்து மதிய உணவு விருந்துபசாரத்தை நடத்தி ஆதரவு கோரியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவு வழங்காது போனால், அமெரிக்காவின் உதவியை இரத்துச் செய்ய போவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இம்முறை மனித உரிமை ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் நோர்வே, சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், லிபியா, மோல்டோ உள்ளிட்ட 14 நாடுகள் கலந்து கொள்ளாது.

இந்த நாடுகளுக்கு பதிலாக ரஷ்யா, சீனா, கியூபா, வியட்நாம், நெம்பியா, மாலைதீவு, சவுதிஅரேபியா உட்பட 14 நாடுகள் புதிதாக இணைந்துள்ளன. இதனால் அமெரிக்கா தனது மகிழ்ச்சியின்மையை வெளியிட்டுள்ளது என்றும் திவயின குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# புலம்பெயர் அமைப்புக்களின் பேச்சை இந்தியா கேட்காது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நம்பிக்கை

(கொழும்பு)

புலம்பெயர்ந்த அமைப்புகள் கோரிக்கைகளை விடுத்தாலும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் அளவுக்கு தற்போது இந்தியா இல்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான உறவின் நெருக்கம் காரணமாக இந்த விடயம் உறுதியாகியுள்ளதாக இயக்கத்தின் பொது செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இது புதிய கோரிக்கையல்ல. ஏற்கனவே பல தடவைகள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதனை நிறைவேற்ற இந்தியாவிற்கு அதிகாரம் கிடையாது. இந்தியாவின் பலம் தற்போது இழக்கப் பட்டுள்ளது.


சீனாவின் அதிகாரம் இலங்கையில் செலுத்தப்பட்டதை அடுத்து, இந்தியாவின் வலியுறுத்தல்களை இலங்கை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை.

உருத்திரகுமாரன் போன்றவர்களின் கோரிக்கைகளை இந்தியா நிறைவேற்றக் கூடிய நிலையில் இல்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொது செயலாளர் வசந்த பண்டார குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முருகன்- நளினி...

# சிறைப் பறவைகளின் காதல் கதை!



### தேவை ஒரு தமிழ்ப் பெண்

சிவராசன் மாஸ்டரை ஒருநாள் பார்க்கப் போனேன். இந்திய இராணுவத்தோடு அமைப்புக்கு ஏற்பட்ட முரண்பாட்டால், இங்குள்ள அரசியல் தலைவர்கள் பலரை நாம் பகைத்துக்கொள்ளும்படி ஆனது. ஆகவே, நல்லெண்ணத்தை வளர்க்க அவர்கள் வரும்போது மாலை அணிவிக்க தமிழ்ப்பெண் ஒருவர் வரவேண்டும் என்றார்.

எனக்கு தமிழகத்தில் தெரிந்த ஒரே பெண் நளினி மட்டும்தான். எங்கள் அமைப்பைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் சிவராசன் கேட்டார் ஏன்று நளினியை அறிமுகம் செய்து வைத்தேன். எனக்கு அமைப்பால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலையும் மீறி, ஒரு மூத்த உறுப்பினரைச் சந்தித்து நளினியை அறிமுகம் செய்துவைத்தேன். நான் வாழ்க்கையில் செய்த ஒரே தவறு அதுதான்!

தாணு, சுபா இருவரையும் சில இடங்களுக்கு அழைத்துச் சென்றார் நளினி. எனக்காக, என் மீதான காதலுக்காக எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் அதைச் செய்தார் நளினி. நான் வழக்கம்போல அமைப்பு சொன்ன உதிரிவேலைகளைச்செய்துவந்தேன்.

ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூரில் கொல்லப்படுவதற்கு ஒரு மாதம் முன்பு. ஏப்ரல் 22 ஆம் திகதி திருப்பதியில் வைத்து நளினியின் கழுத்தில் தாலி கட்டினேன். பல்வேறு நெருக்கடிகள் காரணமாக எங்கள் திருமணத்தை ரகசியமாக வைக்க வேண்டியிருந்தது.

### அந்தக் கொலைக்குப் பின்...

மே 21 இரவு, ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும், அதிர்ச்சியும் குழப்பமும் சரிவிகிதத்தில் என்னைத் தாக்கின. இரவுகள், தூக்கத்தைத் தொலைத்தன. பகல்கள், கொடுந்துயர்மிக்கதாக மாறின. விடுதலைப்புலிகள், அவர்களின் ஆதரவாளர்கள் என அனைவரையும் தேடித் தேடி வேட்டையாடியது காவற்றுறை.

வெளியே தலைகாட்டவே இல்லை நாங்கள். ஆனால், ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட ஐந்து நாட்கள் கழித்து தாணுவின் படம் வெளி வந்தபோது பீதியில் உறைந்துவிட்டோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தகவல் எங்கள் உலகத்தைச் சுருக்கியது. நளினியின் தம்பி பாக்கியநாதனை சி.பி.ஐ. அழைத்துச் சென்ற தகவல் தெரிந்து, நளினி வீட்டுக்கு நான் சென்றபோது அவரது அம்மா என்னைத் திட்டினார்.


என் குடும்பத்தோட வாழ்க்கையையே நாசமாக்கிப்போட்டீங்களேன்னு அழுதார். நான் மௌனமாக இருந்தேன். வேறென்ன சொல்ல முடியும்? அவர்கள் தற்கொலை செய்யும் முடிவில் இருந்தார்கள். நான் அவர்களைச் சமாதானப்படுத்தி, தற்கொலை முடிவை நிறுத்தினேன்.


### திருப்பதியில் மனமாற்றம்!

மறுநாள் காலை நானும் நளினியும் மீண்டும் திருப்பதி சென்றோம். என்னிடம் இருந்த சயனைடு குப்பி, தண்ணீரில் நனைந்து பாழாகிவிட்டது. புதிய சயனைடு குப்பி கேட்டிருந்தேன். தற்கொலை செய்து கொள்ள முடிவு எடுத்திருந்தோம். ஆனால், திருப்பதி போன மறுநாளில் இருந்து நளினி வாந்தி எடுக்கத் தொடங்கினார். அவர் கர்ப்பமாக இருந்தார்.

தற்கொலை முடிவைக் கைவிட்டோம். சி.பி.ஐயால் தேடப்படும் என்னால், கர்ப்பவதி நளினியைக் கவனித்துக் கொள்ளவே முடியவில்லை. அவருக்கு வாந்தி நிற்கவே இல்லை. உதவிக்கு யாரையும் தொடர்புகொள்ளவும் முடியவில்லை. வேறு வழி இல்லாமல் விழுப்புரத்தில் இருந்த ஒரு நண்பரின் வீட்டுக்குச்சென்றோம்.

ஆனால், அவர் அங்கு இல்லை. அதனால் அங்கிருந்து சென்னைக்குத் திரும்பினோம். சைதாப்பேட்டை பேருந்து நிலையத்தில் நாங்கள் இறங்கியபோது எங்களைக் கைது செய்தது பொலிஸ். கைதான சில நாட்களில் எனக்கு, மொட்டைத் தலை முருகன் என்று பெயர் வைத்தார்கள். ரொம்ப வேடிக்கையான பெயர்.





### 37 கிலோ கர்ப்பிணி!

விசாரணைக் கைதியாக செங்கல்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது, நளினி ஐந்து மாதக் கர்ப்பிணி. அப்போது அவரது எடை, வெறும் 37 கிலோ! நளினியை நான் சந்திக்க அனுமதி கிடைக்கவில்லை. நீண்ட போராட்டத்துக்குப் பிறகு சந்திக்க அனுமதி கிடைத்தது. அவரைப்பார்க்க, பெண்கள் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். தரையில் அமர்ந்திருந்தார்.

என்னைப் பார்த்ததும் ஒரு குழந்தைபோல தவழ்ந்து, தவழ்ந்து சுவர் ஓரமாக வந்து ஜன்னலைப் பிடித்தபடி எழுந்து நிற்க முயன்றார். நான் ஓடிச்சென்று தூக்க முயன்றபோது, என்னைத்தடுத்தார்கள். எனக்குச் சாப்பாடு பத்தலை... ரொம்பப் பசிக்குது. இப்படியே விட்டா, என் பிள்ளை செத்துப்போகும் என்று சொன்னார் நளினி. என்னால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

நான் என் செல்லுக்குத் திரும்பி வந்தேன். என்னைக் கைது செய்தபோது என்னிடம் 10,000 ரூபாய் பணம் இருந்தது. அதை என்னிடம் தரச் சொல்லியும் நளினிக்கு போதிய உணவு கொடுக்கச் சொல்லியும் சாகும் வரை தண்ணீர் அருந்தாமல் உண்ணாவிரதம் அமர்ந்தேன். அந்தப் பணத்தை என்னிடம் கொடுத்தார்கள்.

அதை முறைப்படி நளினியின் கணக்கில் சேர்த்து அவருக்கு ஊட்டச் சத்துள்ள உணவு கிடைக்க ஏற்பாடு செய்தேன். பிரசவத்துக்காக குறித்த திகதிக்கு பல வாரங்கள் முன்னரே, நளினி பெண் குழந்தையைப் பிரசவித்தார். தாயும் குழந்தையும் மிகவும் பலவீனமாக இருந்தார்கள். மாற்றுத் துணியோ, உணவோ, எதுவுமே எங்களுக்கு இல்லை.

ஒவ்வோர் இரவிலும் நளினி அனுபவித்த அந்தத் துன்பம் என்னால் வந்தது என்று இப்போதும் நினைத்து நினைத்து அழுகின்றேன். சிறை அதிகாரி ஒருவர் நளினியின் நிலைமையை பார்த்துவிட்டு குழந்தைக்கு பால்மா வாங்கிக் கொடுத்தார். சிறைக்கு வந்த பேரறிவாளனின் அப்பா குயில்தாசன், குழந்தை அரித்ராவுக்கு கொசுவலை வாங்கிக் கொடுத்தார்.



கேட்க இது சாதாரணமாக இருக்கும். ஆனால், அது அப்போது மிகப் பெரிய உதவி. அரித்ராவுக்கு இரண்டரை வயதான போது நளினியை சேலம் சிறைக்கு மாற்றினார்கள்.

அங்கே பாலுக்காக பசு மாடுகள் வளர்த்தார்கள். அரித்ரா அந்தப் பசு மாடுகளைப் பார்த்து ஆச்சரியமாக அது என்ன என்று கேட்டாள். நளினி அழுதுவிட்டாள்.

குழந்தையின் எதிர்காலம் குறித்து அபாயம் உணர்ந்தவர் என்னிடம் உடனே குழந்தையை வெளி உலகத்திற்கு பரிட்சயமாக்க வேண்டும் என்றார். ஆனால் பொருத்தமான கூட்டில்தானே அந்தச் சிட்டுக்குருவி வசிக்க முடியும் காத்திருந்தோம்.

> “நான் என் காதல் மனைவிக்காக கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஓர் ஆயுள் தண்டனைக் கைதிக்கு சிறையில் என்ன வெல்லாம் உரிமைகள் வழங்கப்படுமோ, அதை மட்டுமாவது நளினிக்கு வழங்குங்கள். என் காதல் மனைவிக்கு என்னால் செய்ய முடிந்ததெல்லாம், இப்படியான வேண்டுதல்கள்தான். ஆனால், அவள் எனக்காக தன்வாழ்க்கையையே கொடுத்துவிட்டாள்!”

எங்கள் வழக்கிலேயே சக சிறை வாசியாக இருந்த சுசிந்திரனின் தயார் ஆசை ஆசையாக அரித்திராவை கோவையில் வைத்து வளர்த்தார். சில ஆண்டுகள் கழித்து ஈழத்துக்குச் சென்ற அரித்ரா பிறகு அங்கிருந்து லண்டன் சென்றாள். இப்போது அவளுக்கு வயது 22.

### தனிமையே இணை!

இன்றும் பாதுகாப்பு என்ற பெயரில் தனிமைச் சிறையில்தான் என்னையும் நளினியையும் அடைத்து வைத்திருக்கிறார்கள். ஆறு அடி தூரஇடைவெளியில் 10 பேர் சூழ்ந்து நிற்கும் சூழல்தான் நானும் நளினியும் பேசிக்கொள்ளும் தனிமைத் தருணங்கள்! நீண்ட கால சிறைவாசிகளுக்கு செவித்திறன் பாதிக்கப்படும்.

ஆம்.... எனக்கும் நளினிக்கும் செவித்திறன்பிரச்சினை உள்ளது. செவித்திறன் பாதிக்கப்பட்டுள்ள இருவர், ஆறு அடி இடைவெளியில் என்ன பேசிக்கொள்ள முடியும் என்று நீங்கள் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

நாளை ஒருவேளை என் தண்டனை குறைக்கப்படலாம்... அல்லது நான் தூக்கில் இடப்படலாம்! என் வாழ்வின் எஞ்சிய நாட்களை, ஒருவேளை எஞ்சினால் நான் எப்படிக் கழிக்க வேண்டும் என்பதை இந்த மதில் சுவர்களே தீர்மானிக்கும். வாழ்வின் எந்தசந்தோஷங்களையும்காணாத எனது வாழ்வில், ஒரு வானவில்லைப் போல மின்னி மறைந்த நளினியுடனான காதல் நினைவுகள் மட்டுமே என்னிடம் எஞ்சியிருக்கின்றன.

நான் என் காதல் மனைவிக்காக கேட்பதெல்லாம், ஒன்றே ஒன்றுதான். ஓர் ஆயுள் தண்டனைக் கைதிக்கு சிறையில் என்னவெல்லாம் உரிமைகள் வழங்கப்படுமோ, அதை மட்டுமாவது நளினிக்கு வழங்குங்கள்.

என் காதல் மனைவிக்கு என்னால் செய்ய முடிந்ததெல்லாம், இப்படியான வேண்டுதல்கள் தான்.


ஆனால், அவள் எனக்காக தன்வாழ்க்கையையே கொடுத்துவிட்டாள்! (முற்றும்)

-ஆனந்த விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2014-14.03.2014



## துலாம்

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள்,**
**சுவாதி, விசாகம்**
**1,2,3 ஆம் பாதங்கள்**

**வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் துலாம் இராசி நேயர்களே!**

**ஆரோக்கியத்தில் அதிக அக்கறை தேவைப்படும் நேரம்!**

மாசிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்ரம் பெறும் சூழ்நிலை உருவாகிறது. சுகாதிபதியான சனி வக்ரம் பெறும்பொழுது, ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். தெய்வீக சிந்தனையை வளர்ப்பதன் மூலம் திருப்பங்களை காணலாம்.

மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அதை 9இல் சஞ்சரிக்கும் குரு பகவான் பார்க்கிறார். எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தனாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தன வரவு வந்த மறு நிமிடமே செலவாகலாம். எனவே, சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது. அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வரும் வாய்ப்பும் கிட்டும். வீட்டிலுள்ள டி.வி. பிரிட்ஜ் போன்ற விலை உயர்ந்த பொருட்களை கொடுத்துவிட்டு புதிதாக வாங்கி உபயோகிக்க முன்வருவீர்கள்.

இம்மாதம் புதன், குரு ஆகிய கிரகங்கள் வக்ர நிவர்த்தியாகின்றன. அதே நேரத்தில் சனி, செவ்வாய் ஆகிய கிரகங்கள் வக்ர இயக்கத்தை தொடங்குகின்றன. எனவே இம்மாதத்தில் வழிபாட்டின் மூலமே வளர்ச்சியை கூட்டிக் கொள்ள இயலும்.

**புதனின் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

பெப்ரவரி 21ஆம் திகதி புதன் வக்ர நிவர்த்தியாகிறார். 9, 12-க்கு அதிபதி வக்ர நிவர்த்தியாவதால் பொருளாதார நிலை மேலோங்கும். என்றாலும், விரயாதிபதி பலம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குறிப்பாக உங்கள் ராசிக்கு 5ஆம் இடமான கும்பத்தில் மார்ச் 10ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, பிள்ளைகள் வழியில் நீண்ட நாளாக நடைபெறாத சுபகாரியப் பேச்சுக்கள் இப்பொழுது நடைபெறத் தொடங்கும். பூர்வீக சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்களை வாங்க முன்வருவீர்கள். பயணங்களால் பலன் கிடைக்கும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 1, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான ராசிநாதன் சுக்ரன் மகர ராசியில் பெப்ரவரி 25ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். கடன் சுமை ஓரளவு குறையும்.

**சனியின் வக்ரமும், செவ்வாயின் வக்ரமும்!**

மார்ச் முதலாம் திகதி சனி, செவ்வாய் ஆகிய இரண்டு கிரகங்களும் வக்ரம் பெறுகின்றன. சனி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. சுகாதிபதியாகவும், பஞ்சமாதிபதியாகவும் விளங்கும் சனி வக்ரம் பெறும் பொழுது அலைச்சல் அதிகரிக்கும். ஆரோக்கியம் கருதி மாற்று மருத்துவங்களையும் மேற்கொள்வீர்கள். 2, 7-க்கு அதிபதியான செவ்வாய் வக்ரம் பெறுவதால் குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கலாம். குடியிருக்கும் வீட்டாலும் பிரச்சினைகள் ஏற்படும். கடன் சுமை கவலை தரும்.

**மிதுன குருவின் வக்ர நிவர்த்தி காலம்!**

3, 6-க்கு அதிபதியான குரு இதுவரை வக்ர இயக்கத்தில் இருந்தார். இம்மாதம் மார்ச் 12 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். இந்த வக்ர நிவர்த்திக் காலம் அவ்வளவு நல்லதல்ல. எதிரிகள் ஸ்தானாதிபதி பலம் பெறும் பொழுது எதிர்ப்புகள் மேலோங்கும். உடன் பிறப்புகளை அனுசரித்துச் செல்லுங்கள். உற்றார், உறவினர் செய்யும் குற்றம், குறைகளைப் பெரிது படுத்தாதீர்கள்.


இம்மாதம் ஜென்ம ராகு, சப்தம கேதுவிற்கு சர்ப்ப பிரீதியைச் செய்வது நல்லது. மேலும் சனிக்கிழமை தோறும் சனி பகவான் வழிபாட்டிலும் கவனம் செலுத்துங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம் அருகிலிருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாகும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மன வேகத்திற்கு ஏற்ப செயல் வேகம் இருக்காது. மக்கட் செல்வங்கள் நலன் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். விலை உயர்ந்த பொருட்கள் ஒரு சிலவற்றை விற்க நேரிடலாம். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். என்ன இருந்தாலும் சனிப்பெயர்ச்சி ஆகும் வரை பொறுமையைக் கையாள்வது நல்லது. அனுமன் வழிபாடும், சர்ப்பக் கிரக வழிபாடும் நன்மையை வழங்கும்.

## தெய்வீக சிந்தனையை வளர்ப்பதன் மூலமே திருப்பங்களைக் காணலாம்

# சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம்,**
**அனுஷம், கேட்டை**

**சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக மாற்றிக் காட்டும் விருச்சிக இராசிநேயர்களே!**

**வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நேரம்!**

மாசிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே தன ஸ்தானத்தில் சுக்ரன் வீற்றிருக்கின்றார். தொழில் ஸ்தானாதிபதி சூரியன் தன் வீட்டைத் தானே பார்க்கிறார். குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிகிறது. சந்திரன் 9இல் உலா வந்து மாதம் தொடங்குகின்றது. எனவே, இந்த மாதம் இனிய மாதமாகவே அமையப் போகிறது.

வெற்றிக்குரிய தகவல்கள் வீடு நோக்கி வந்து கொண்டே இருக்கும். தொட்டது துலங்கும். தொழில் வளம் மேலோங்கும். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். இம்மாதத்தில் 2 கிரகங்கள் வக்ர நிவர்த்தியாகின்றன. ஒன்று புதன், மற்றொன்று வியாழன். மேலும் 2 கிரகங்கள் வக்ர இயக்கத்தை தொடங்குகின்றன. அவற்றில் ஒன்று சனி மற்றொன்று செவ்வாய்.

சுய ஜாதகத்தை ஒருமுறை புரட்டிப் பாருங்கள். அதில் திசாபுத்திகள் பலம் பெற்றிருந்தால் இது போன்ற வக்ர காலங்களில் உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும். இல்லையேல் பரிகாரங்களைச் செய்து பலன் பெறலாம். குறிப்பாக ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடப்பதால் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிக் கவசம்பாடி, சனிபகவானை வழிபட்டு வருவது நல்லது. 6இல் கேதுவும், 12இல் ராகுவும் இருப்பதால் ஏற்ற இறக்கமில்லாத இனிய வாழ்க்கை அமைய சர்ப்ப ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**புதனின் பெயர்ச்சியும், வக்ர நிவர்த்தியும்!**

உங்கள் ராசிக்கு 8, 11-க்கு அதிபதியானவர் புதன். அந்த புதன் பெப்ரவரி 21ஆம திகதி வக்ர நிவர்த்தியாகிறார். சகாய ஸ்தானத்தில் வக்ர நிவர்த்தியாவதால் தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். தொழில் பங்குதாரர்களை விலக்கி விட்டுப் புதியவர்களைச் சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். மார்ச் 10ஆம் திகதி கும்ப ராசியில் சஞ்சரிக்கும் சூரியனோடு புதன் இணைந்து சஞ்சரிக்கப் போகிறார். இந்த புத-ஆதித்ய யோகம் பொருளாதார வளர்ச்சியை கூட்டும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 7, 12-க்கு அதிபதியான சுக்ரன் பெப்ரவரி 25 ஆம் திகதி மகர ராசிக்கு செல்ல இருக்கிறார். எனவே, பெண் வழிப பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். குடும்பத்தினர்களின் குறைகளைப் பூர்த்தி செய்வீர்கள். இல்லம் கட்டிக் குடியேற வேண்டுமென்ற நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். உறவினர் பகை அகலும். தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும்.

**சனி, செவ்வாய் வக்ரம்!**

மார்ச் முதலாம் திகதி சனி மற்றும் செவ்வாய் வக்ர இயக்கத்தை தொடங்குகின்றன. விரய சனியாக இருந்து வக்ரம் பெறுவது நன்மைதான். விரயம் கொஞ்சம் குறைவாக இருக் கும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. செவ்வாயின் வக்ர இயக்க காலத்தில் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் அக்கறை செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இட மாற்றம், ஊர் மாற்றம் போன்றவைகள் பதவி உயர்வோடு வந்து சேரலாம். குலதெய்வ வழிபாடு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**மிதுன குருவின் வக்ர நிவர்த்தி காலம்!**

உங்கள் ராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவான் மார்ச் 12ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகின்றார். இது மிகுந்த யோகம் தரும். தன வரவு அதிகரிக்கும். வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். குருவின் பரிபூரண பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவதால் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். இம்மாதம் நந்தியெம்பெருமான் வழிபாடும், உமா மகேஸ்வரர் வழிபாடும் நலமும், வளமும் சேர்க்கும்.


**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம்தொட்ட காரியங்களில் வெற்றி பெறும் மாதமாக அமையப் போகிறது. தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கூட்டாளிகளால் நன்மை ஏற்படும். விலை உயர்ந்த பொருட்களை மாதத்தின் மையப்பகுதியில் வாங்கி மகிழ்வீர்கள். பழைய சொத்துக்களை கொடுத்துவிட்டு புதிய சொத்துக்களை வாங்கி வீடு கட்ட முன்வரும் சூழ்நிலை உண்டு. தாய்வழி ஆதரவு பெருகும். பயணங்களாலும் பலன் கிடைக்கும். விரயச் சனி நடைபெறுவதால் குழந்தைகள் வழியில் சுப விரயம் உருவாகும். பௌர்ணமி வழிபாடு பலன் தரும்.

## வெற்றிக்குரிய தகவல்கள் வீடுதேடி வந்து கொண்டே இருக்கும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள க.பொ.த.(சாதாரண) மாணவர்களுக்கு கையேடுகளும் உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம், வணிகத்துறை மாணவர்களுக்கான வினாவிடைத் தொகுப்புக்களும் இலவசமாக அண்மையில் வழங்கப்பட்டன. இதில் சிரேஷ்ட சட்டத்தரணி இ.தேவசேனாதிபதி உட்பட வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் வளவாளர்களினால் கருத்தரங்கு இடம்பெறுவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

## சட்டவிரோத மீன்பிடி; மீனவருக்கு தண்டம்

நாயாறு கடல்நீரேரியில் தடை செய்யப்பட்ட வலையைக் கொண்டு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவருக்கு மூவாயிரம் ரூபாவை தண்டப் பணமாக முல்லைத்தீவு நீதிமன்றம் விதித்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை தடைசெய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தி நாயாறு கடல்நீரேரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை நாயாறுக் கடற்படையினரின் உதவியுடன் முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் நீரியல்வளத்துறை திணைக்களத்தினர் கைது செய்தனர்.

இவ்வாறாக கைது செய்யப்பட்ட நபரை முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது மூவாயிரம் ரூபா தண்டப்பணம் அறிவிடப்பட்டதோடு தங்கூசி வலைகள் நீதிமன்ற வளாகத்தினுள்ளே போட்டு எரிக்கப்பட்டதாக மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் மீது இவ்வாறான நடவடிக்கைகளே தொடர்ந்தும் இடம்பெறும் என அவர் எச்சரித்துள்ளார். (அ-9-267)

# தற்காலிக கொட்டகைக்குள் நடைபெறும் கற்றல் செயற்பாடு

## வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியின் நிலை

(குருமன்காடு)

முல்லைத்தீவு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் அடிப்படை வசதிகளின்றி சிரமங்களின் மத்தியில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

904 மாணவர்கள் கல்வி பயில்கின்ற இப்பாடசாலையிலுள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்காலிக கொட்டகைகளின் கீழ் சேதமடைந்த தளபாடங்களில் அமர்ந்தே கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.



அத்தோடு நூலகம் உள்ள போதிலும் போதுமான நூல்கள் இன்மையாகவுள்ளது.

அதேபோல் ஆய்வு கூடத்திலும் பரிசோதனைப் பொருட்கள் காணப்படுவதில்லை.

பொது மண்டபங்கள் அமைக்கப்படாமையினால் மரநிழலின் கீழே ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றுகூடல்களை நடத்துகின்றனர்.

வெளிமாவட்டங்களிலிருந்து கல்வி கற்க வருகின்ற ஆசிரியர்களுக்கு விடுதியின்மையால் அவர்கள் தங்கி நின்று கற்பிப்பதில் பல இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையிலுள்ள பாடசாலையின் குறைபாடுகள் குறித்து பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களால் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

இதையடுத்து அவர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (அ-9-250)

# நெல் கொள்வனவில் விலைக்கட்டுப்பாடு

## கோருகின்றனர் விவசாயிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராகவுள்ள நெல்லினங்களுக்கு விலைக் கட்டுப்பாட்டை விதிக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் பருவமழை பெய்யாத காரணத்தினால் காலபோகச் செய்கையில் விவசாயிகள் பாரிய வீழ்ச்சியை எதிர்கொண்டனர்.

ஆயினும் சில நெல் வயல்கள் தப்பிப் பிழைத்து இருந்த நிலையில், தற்போது அவை அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக அறுவடை செய்யப்பட்ட நெற்களை கொள்வனவு செய்ய வரும் தனியார் வியாபாரிகள் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முனைகின்றனர்.

அத்தோடு இவ் வியாபாரிகள் குறித்த சில நெல்லினங்களோடு வேறு நெல்லினங்கள் கலந்திருப்பதாகவும் இதனால் தான் தாங்கள் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவுசெய்வதாகவும் கூறி விவசாயிகளை ஏமாற்றி வருகின்றனர்.

காலபோகச் செய்கை அழிவடைந்தமையால் விவசாயிகளில் அநேகமானோர் பெற்ற கடன்களை மீளளிக்க முடியாமலும் அன்றாட வாழ்க்கையை நகர்த்த முடியாத சூழலுக்கும் உட்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அறுவடை செய்யப்பட்ட மிகச் சொற்பளவிலான நெல்லினங்களையும் குறைந்த விலையில் கொள்வனவு செய்வது கவலை அளிப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, உரியவர்கள் நெல்லினங்களை கொள்வனவு செய்வதற்கான விலைக் கட்டுப்பாட்டை விதிக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-254)




# இராணுவத்தினரால் காணிக்குள் கழிவுகள் கொட்டப்படுகின்றன

## தொற்றுநோய் ஏற்படும் அபாயம்



(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள அளம்பில் வடக்கு கிராமத்தின் தனியார் காணியொன்றினுள் இராணுவத்தினர் கழிவுகளை போடுவதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

அளம்பில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் கனேடியன் வீதியிலுள்ள தனியார் காணியொன்றினுள்ளேயே இராணுவத்தினர் கழிவுகள் போட்டு வருகின்றனர்.

காலை, மாலை என இரு வேளைகள் உழவியந்திரம் மூலம் மலக் கழிவு உட்பட ஏனைய கழிவுகளும் போடப்பட்டு வருகின்றன.

இதனை அளம்பில் பிரசேத்தியிலுள்ள 24 ஆவது பட்டாலியன் சிங்க றெயிமன்ற் படைப் பிரிவினரே மேற்கொண்டு வருகின்ற னர்.

சுமார் ஒரு வருடங்களுக்கு மேலாக இக்கழிவுகள் போடப்படுவதனால் இக்கழிவுகள் கொட்டப்படும் இடத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் வசிக்கும் மக்கள் சுகாதார சீர்கேடுகளால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்தோடு இக் குடியிருப்புக்களில் இலையான் தொல்லையும் டெங்கு, மலேரியா போன்ற நோய்களும் ஏற்படுவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளது.

அது மாத்திரமின்றி உயிரினங்கள் பலவும் இக்கழிவுகளை உண்டு நோய் தாக்கத்திற்குள்ளாகி இறந்துமுள்ளன.

இது தொடர்பில் இராணுவத்தினர், பொது சுகாதார பரிசோதகர், கிராம சேவையாளர் போன்றோருக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் ஆகியோர் முல்லை. மாவட்ட இராணுவத்தளபதிக்கு தெரியப்படுத்தி சுகாதார சீர்கேட்டை தடுக்க முன்வர வேண்டும் என் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

## மோ.சைக்கிளின் மின்குமிழை ஒளிர விடுமாறு உத்தரவு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தினுள் பகல் வேளைகளிலும் வீதியில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு மின்குமிழ்களை ஒளிர விடுமாறு வவுனியா பொலிஸார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

விபத்துக்களை குறைக்கும் நோக்கோடு மேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் வெற்றியளித்துள்ள நிலையிலேயே தற்போது ஏனைய மாவட்டங்களுக்கும் இத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா பொலிஸார் நேற்று நண்பகலிலிருந்து வீதியால் செல்லும் அனைத்து மோட்டார் சைக்கிள்களையும் மின்குமிழ்களை ஒளிரச் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்து வருகின்றனர். (அ-9-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணுக்குள் ஆணி

## பேக்கரி உரிமையாளர் கைது

(கொழும்பு)

விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாண் ஒன்றினுள் சிறிய கம்பி ஆணி ஒன்று இருந்த குற்றச்சாட்டில் தொடரப்புட்ட வழக்கில் கடை உரிமையாளர் மற்றும் பேக்கரி உரிமையாளர் ஆகிய இருவருக்கும் பதினேழாயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இவ் விருவரும் சிலாபம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவர்களிருவருக்கும் சிலாபம் மேலதிக மாவட்ட நீதிபதியும், நீதவானுமாகிய கல்ஹாரி கே.லியனகேவினால் இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது.

சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த கடை உரிமையாளர் ஒருவருக்கும், அதே பிரதேசத்தைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளர் ஆகிய இருவர் மீதே பாணினுள் கம்பி ஆணி இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

குறித்த கடை உரிமையாளரின் கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாண் ஒன்றினை விலைக்கு வாங்கிய ஒருவர் அப்பாணை கொண்டு சென்று உண்பதற்கு ஆயத்தமான போது அப்பாணினுள் கம்பி ஆணி ஒன்று இருந்துள்ளது. இதனையடுத்து இது தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் பொதுச் சுகாதார பரிசோதகரினால் இவ்விடயம் தொடர்பில் சிலாபம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குறித்த கடை உரிமையாளரும், பேக்கரி உரிமையாளரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போதே இவ்விருவருக்கும் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வனராஜா பகுதி காட்டில் தீ!


(கண்டி)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வனராஜா பகுதியில் ஏற்பட்ட தீ காரணமாக சுமார் 10 ஏக்கர் நிலபரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

இனந்தெரியாத நபர்கள் சிலரே காட்டுக்கு தீ வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதேவேளை, பிரதேச மக்கள் மற்றும் பொலிஸாரும் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட போதும் அது பயனளிக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### குமாரவேலு கிருபாகரன்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை waltha ms tow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு கிருபாகரன் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை முற்பகல் 11.30 மணிக்கு City Of London cemetery crematorium , aldersbrook road , greater London , E12 5 DQ என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சுப்பிரமணியம் தாமோதரம்பிள்ளை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நவற்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தாமோதரம்பிள்ளை கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெற்று பூதவுடல் நிலாவரை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி பொன்னுத்துரை செல்லம்மா

காரைநகர் வாரிவளவை பிறப்பிடமாகவும் மணற்காடு சிவகாமி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்லம்மா நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றது.



### திருமதி இராசையா சரஸ்வதி

கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சரஸ்வதி கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கைலாசபிள்ளை கண்மணி.

உசனைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை கண்மணி நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.

# ஆளில்லா விமான சேவை மூலம் குடியேறிகளை தடுக்க முடிபு

## விமானங்களை கொள்வனவு செய்கிறது ஆஸி.

இலங்கை மற்றும் இந்தோனேசியாவிலிருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கத்தில் வரும் குடியேறிகளை தடுப்பதற்காக அவுஸ்திரேலியா புதிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

அவுஸ்திரேலிய கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆளில்லா விமானங்களை சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளது.

இதன்பொருட்டு 2.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 7 ஆளில்லா விமானங்களை அவுஸ்திரேலியா கொள்வனவு செய்யவுள்ளது.

ஜம்போ ஜெட் விமானத்தின் இறக்கைகளை போன்ற பெரிய ஆளில்லா விமானங்கள் அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்படவுள்ளன.

இதற்காக அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் டேவிட் ஜோன்ஸ்டன் அமைச்சரவை அறிக்கையொன்றை சமர்பித்துள்ளார்.

கடலால் சூழப்பட்ட அவுஸ்திரேலிய நிலப்பரப்பை சட்டவிரோத குடியேறிகளிடமிருந்தும், அத்துமீறி மீன்பிடிப்பவர்களிடம் இருந்தும் பாதுகாக்கும் நோக்கில் இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அவுஸ்திரேலியா தற்போது தமது கடற்பரப்பை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் சிறியரக விமானங்களை பயன்படுத்தி வருகின்றது.

எதிர்காலத்தில் பெரிய ஆளில்லா விமானங்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

டோனி அபட் தலைமையிலான லிபரல் கட்சி ஆட்சிக்குவந்த பின்னர் இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து சட்டவிரோத குடியேறி களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (அ-2)

# 13 ஆபிரிக்க நாடுகள் இலங்கைக்கு ஆதரவு

## ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு

அமெரிக்காவினால் இலங்கை க்கு எதிராக ஜெனீவா மனிதவுரிமை ஆணைக் குழுவில் முன் வைக்கப்படவுள்ள பிரேரணையை தோற்கடிக்க 13 ஆபிரிக்க நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க உறுதியளித்துள் ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் சில ஆபிரிக்க நாடுகளுக்கு சென்றிருந்த போது அந் நாடுகளின் தலைவர்களை சந்தித்து விடயங்கள் குறித்து தெளி வுப்படுத்திய பின்னர், அந்நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தும் தேசிய செயற்பாட்டு திட்டம் தொடர்பில் அண்மையில் ஊடகங்களுக்கு தெளிவுப்படுத்தும் போதே அவர் மேற்காண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஷ்யா, சீனா, கியூபா, பாகிஸ்தான், மத்திய கிழக்கை சேர்ந்த பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதாக ஏற்கனவே அறி வித்துள்ளன.

இலங்கைக்கு எதிராக போர் குற்றங்களை சுமத்தி அது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் வாழும் புலம் பெயர் தமிழர்கள் அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர்.

அமெரிக்காவுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட போது அமெரிக்க இராஜாங்க திணைக் களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலை சந்தித் தேன்.

அவர் இலங்கையின் பிரச் சனை குறித்து எவ்விதமான ஆராய் வுகளை மேற்கொள்ளாது, அரச சார் பற்ற நிறுவனங்கள், புலம் பெயர புலி கள் மற்றும் த்மிழ் அமைப்புகள் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக கொண்டு பேசினார் என்றார். (அ-2)

# 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்

## புத்திஜீவிகள் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு புத்திஜீவகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.


13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தாவிட்டால் சர்வதேச ரீதியான அழுத்தங்களை அரசாங்கம் எதிர்நோக்க நேரிடலாம் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு சில அமைச்சர்களும், புத்திஜீவிகளும் கோரிக்கை விடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்த விடயம் குறித்து பேசப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரெஜினோல்ட் குரே, ராஜித சேனாரட்ன உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதியிடம் பேசுவதற்கு இந்தக் கூட்டத்தின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது. முன்னாள் இராஜதந்திரிகளான தமரா குணநாயகம், தயான் ஜயதிலக்க, குமார் ருபசிங்க, விக்டர் ஐவன் போன்ற புத்திஜீவிகளும் இந்த கூட்டத்தில் பங்கேற்றிருந்ததாக தெரியவருகின்றது. (அ-2)



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கணனி வழங்கப்பட்டது. இக் கணனியை ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச பொறுப்பாளரான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பாடசாலை அதிபரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

பூநகரி கோட்டத்தைச் சேர்ந்த செல்லியாதீவு அ.த.க.பாடசாலை யின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை முதல்வர் எஸ்.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி விளையாட்டுத்துறை பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராசாவும் விசேட விருந்தினராக கிளி/வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேலும் கலந்து கொள்கிறார்கள். (அ-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பங்களுடன் உறவினர்கள் சாட்சியம்



இறுதி கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் குடும்பத்துடன் எனது மகள்காணாமற் போய் விட்டாள் அவளது பிள்ளைகளையாவது என்னிடம் மீட்டுத்தாருங்கள் என்று ஜனா










திபதி ஆணைக்குழுவின் முன் தாயொருவர் கண்ணீர் விட்டு கதறியழுத சம்பவம் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான யுத்த காலப்பகுதியில் வடக்கில் காணாமற்போனவர்களை கண்டறியும் நோக்குடன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்



குழுவின் விசாரணைகள் நேற்றுடன் தொடர்ந்து மூன்று நாட்கள் யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்த விசாரணை யில் குடும்பமாக பலர் வந்து சாட்சியமளித்ததை அவதானிக்க முடிந்தது. அதேவேளை குடும்பங்களுடன் தமது உறவினர்கள் காணாமற் போனதாகவும் சாட்சியமளித்திருந்தனர்.

இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியங்கள் ஏற்கனவே குவிந்துள்ள நிலையில் நேற்றையதினமும் அதிகளவான சாட்சியங்கள் இராணுவத்தினருக்கு எதிராகவே முன்வைக்கப்பட்டன. இராணுவத்தினரின் சுற்றி வளைப்புகளின் போதும் இராணுவச் சோதனைச்சாவடிகளில் இறக்கி சோதனை செய்ததன் பின்புமே அதிகளவானர்கள் காணாமற்போனதாக சாட்சியமளிக்கப்பட்டது.

இதனைவிட இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்ததன் பின்பு முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதியில் பலர் இராணுவத்தினரால் ஏற்றி செல்லப்பட்டதன் பின்பு காணாமற்போனதாகவும் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டது. இதே வேளை தமது உறவினர்கள் காணாமற் போகவில்லையென்றும் அவர்களை இராணுவத்தினரே கொண்டு சென்றனர் என்றும் உறவினர்கள் கண்ணீர்மல்க சாட்சியமளித்தனர்.

**கடந்த 2006 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை யாழ்ப் பாணத்தில் பலர் வெள்ளை வானில் வந்தவர்களினால் கடத்தப்பட்டிருந்தனர்.**



<u>வெள்ளைவானில் கடத்தல்.</u>

யாழ்.மாவட்டத்தில் ஆரம்பமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கு சமுகமளித்தவர்களில் பலர் இராணுவத்தினர் மற்றும் கருணா குழுவினர், ஈழமக்கள் ஜனநாயககட்சியினர், விடுதலைப்புலிகளுக்கு எதிராக சாட்சியமளித்து வந்த நிலையில் நேற்றைய தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசாரணையின்போது வெள்ளை வானில் வந்தவர்களினால் தமது பிள்ளைகள் நள்ளிரவு வேளைகளில் கடத்தப்பட்டதாக சாட்சியமளித்தனர். கடந்த 2006 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் பலர் வெள்ளை வானில் வந்தவர்களினால் கடத்தப்பட்டிருந்தனர். இவர்களின்தற்போதைய நிலையை அறிய அவர்களின் குடும்பத்தினர் தொடர்ந்து அலைந்து திரிந்துவருகின்றனர். இதே வேளை கடந்த 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற கற்றுக் கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாகவும் பலர் சாட்சியமளித்திருந்தனர். இந் நிலையில் அந்த ஆணைக் குழுவின்பரிந்துரைக்கு அமைவாக ஜனாபதியினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக் குழுவிடமும் சாட்சியமளித்து வருகின்றனர்.

யுத்தகாலப்பகுதியில் வடக்கில் இடம்பெற்ற கடத்தல்களும் காணாமற்போதல்கள் தொடர்பிலும் காலத்துக்கு காலம் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றபோதும் முடிவுகள் ஏதும் எட்டப்படாத நிலையிலேயேயுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள நிலையில் அதில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்காவினால் மூன்றாவது தடவையாகவும் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது. இந்த பிரேரணையிலிருந்து ஓரளவுக்கேனும் தப்பித்து கொள்ளும் நோக்குடன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுதான் இந்த காணாமற் போனவர்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக் குழு என்று பலர் விமர்சித்து வரும் நிலையில் அந்த ஆணைக்குழுவின் விசாரணைகளிலும் அரசாங்கத்திற்கு எதிராகவும் இராணுவத்திற்கு எதிராகவும் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றமையும். குடும்பங்களுடன் பலர் காணாமல் போயுள்ளதாகவும் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை மேலும் அரசிற்கு அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நேசிக்கும் ஒருவருக்கு மரணம் நேரிடும் பொழுதுதான் நாம் மரணத்தை முதன்முதலாக உணர ஆரம்பிக்கின்றோம். ~ ஸ்டேல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உத்தமர்களாயின் நீங்களே உலகிடம் சொல்லுங்கள்

நீதி கேட்டு ஆராய்ச்சி மணியை அடித்த பசுவிற்கு காலம் கடத்தாமல் தீர்ப்பு வழங்கினான் மனுநீதிச் சோழன்.

பசுவுக்கு இத்துணை வேகம் காட்டப்பட்டது என்றால், தன்னுயிர் போல் மன்னுயிரை நேசிக்கும் மகத்தான பண்பு மன்னன் மனுநீதியிடம் இருந்தது என்பதே பொருள்.

ஒரு மன்னன்– அரசன்– தலைவன் என்றால் அவன் மன்னுயிரை தன்னுயிர் போல் நேசிக்க வேண்டும். ஆனால் அரக்கர் பூமியில் மன்னுயிர் என்ன? மனித உயிரே இனத்துவத்தின் பெயரால் வதைக்கப்படுகின்றது.

என் பிள்ளையை உன் பிள்ளை கொன்றான். இதற்கு நீ நீதி தா என்று மன்னனின் மனை நோக்கி பசுமாடு செல்கின்றது. அரண்மனையின் வாயிலில் உள்ள ஆராய்ச்சி மணியை தன் கொம்பினால் இழுத்து அடித்து தன் குறை சொல்கின்றது மாடு.

மன்னர்களின் நீதி வழுவா நெறியை நாடாளும் தலைவர்கள் அறியவேண்டும் ஒரு நாட்டின் தலைவன் கோபம் கொண்டால், பகை கொண்டால் மக்கள் மகிழ்வாக இருக்கவே முடியாது.

மன்னன் தன் இனத்திற்காக பிற இனத்தை வெறுத்தால் கண்ணீரும் கம்பலையுமே அந்த நாட்டில் மீதமாகும்.

இந்த நிலைமைக்குள் இருந்து நீந்திக் கரை சேர்வதென்பது செய்த வினையை இந்த நாடு தின்று தீர்க்கும் போதே சாத்தியமாகும்.

2009-ம் ஆண்டு வன்னிப் போரில் நடந்த நிட்டூரத்திற்காக ஐந்து ஆண்டுகள் கடந்து விசாரணை நடக்கிறது. அந்த விசாரணை இழந்தவரின் உறவுகளுக்கு நீதியைத் தருமா? என்பதை விசாரிப்போர் கூட சொல்லமுடியாத அளவிலேயே நிலைமை உள்ளது. ஆயினும் ஐந்து ஆண்டுகளின் பின் விசாரணை நடப்பதாயினும் சாட்சி வழங்குவோரின் அழுகண்ணீர் காலம் கடந்ததல்ல. அது இப்போதும் புதிதானதே.

மாரடித்து மண்ணில் வீழ்ந்து புரண்டு ஐயா! என் பிள்ளை எங்கே? என்று கத்திக் கதறும் பெற்ற தாயின் புலம்பலுக்கு காலக் கடப்பு ஏதும் கிடையாது.

ஓ! ஜனாதிபதி ஆணைக்குழுவிலிருந்து விசாரணை செய்யும் உத்தமர்களே! இந்த அழு கண்ணீர் உங்கள் இதயங்களை நிச்சயம் நெருடியிருக்கும். இனத்தின் பெயரால் நடந்த நாசகாரங்களை இடித்துரைத்திருக்கும்.

ஆக, தமிழ்த்தாய்மார் விட்ட கண்ணீர் வன்னியில் நடந்த நெட்டூரத்தின் சாட்சியம். இது நிச்சயம் உங்கள் மனச்சாட்சியைத் தொட்டிருக்கும்.

இந்த இடத்தில் சாட்சியங்களுக்காக இந்த நாட்டுத் தலைமை நம் இனத்திற்கு நீதியைத் தரப்போவதில்லை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால் நீங்கள் உங்கள் மனச்சாட்சியில் தமிழ்த் தாய்மார்களின் அவலத்தை நிச்சயம் பதிவு செய்திருப்பீர்கள்.

ஆம், நீங்கள் உத்தமர்களானால் இந்த உண்மையை உலகிடம் உரைத்துவிடுங்கள். அப்போது தான் உங்களால் ஆறுதல் அடையமுடியும்.

# முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றது

## பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா

(கொழும்பு)

அரசாங்கத்தின் சிறப்புரிமைகளையும், சலுகைகளையும் பயன்படுத்தியும், அனுபவித்தும் வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசாங்கத்திற்கே எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதுக்கடை பிரதேசத்தில் தேர்தல் அலுவலகம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதனையே மேற்கொண்டு வந்தது எனவும்எனினும்மேல்மாகாண சபைத் தேர்தலில் மத்திய கொழும்பு மக்கள் அதனை மேற்கொள்ள இடமளிக்க மாட்டார்கள் எனவும் பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

தேர்தலை இலக்கு வைத்து இனவாதம் மற்றும் மதவாதத்தை தூண்டும எவருக்கும் மக்கள் வாக்களிக்கக்கூடாது.

அரசாங்கம் வழங்கிய வாகனங்கள், பாதுகாப்பு மற்றும் ஏனைய சிறப்புரிமைகளை பயன்படுத்திகொண்டு அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை முன்வைப்பது கனவான் அரசியல் அல்ல.

இதன் மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரட்டை நிலைப்பாடு வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் உட்பட எதிர்க் கட்சிகள் முஸ்லிம் மக்களை ஏமாற்றி நாடு முழுவதும் வாக்குகளை கொள்ளையிட்டன. ஆனால்மேல்மாகாண சபைத்தேர்தலில் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கபபடும்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம் என சகல இன மக்களும் ஒற்றுமையாகவும் சகோதரத்துவமாக மத்திய கொழும்பு தொகுதியில் வாழ்ந்து வருகின்றனர்.

இதனை சீர்குலைக்க சிலர் முயற்சித்து வருகின்றனர். எனவே ம்க்கள் இதற்கு இடமளிக்கக்கூடாது என்றார். (அ-2)

# முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு ஐக்கிய நாடுகள் சபையும் உடந்தை

## டில்லியில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இலங்கை அரசாங்கம் மீது நடவடிக்கை எடுக்குமாறும் டில்லியில் ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் டில்லி உயர்நீதி மன்றத்தின் பிரபல வழக்கறிஞர் வே.ராம் சங்கரின் ஏற்பாட்டில் இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

ஐ.நாடுகள் சபை, இந்தியா மற்றும் இலங்கை விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் முக்கியமானவர்கள். ஐ.நாவில் விஜய் நம்பியார் இந்தியா சார்பாக நடித்துள்ளார்.

மக்கள் தீர்ப்பாயத்தின் மூலம் பிரித்தானியாவும் அமெரிக்காவும் இனப்படுகொலைக்கு உடந்தையாக இருந்தமை அம்பலத்திற்கு வந்துள்ளது.

அதேநேரம், இரு நாடுகளும் பயங்கரவாதத்திற்கு எதிராக போர் என்று கூறிக்கொண்டனர்.

இந்த நிலையில்,கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் போரைப பயன்படுத்தி தமிழர்களை அடியோடு அழிக்க முயன்றமைக்கு பிரான்சும் துணைபோனது என இவ்வார்ப்பாட்டத்தின் போது கோஷம் எழுப்பப்பட்டது.

மேலும், இனப்படுகொலைக்கு ஆதரவான இந்தியாவின் இறந்த மனசாட்சியைத் தட்டியெழுப்ப இந்தியா முழுவதும் ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது. (அ-2)

# ஒரே இரவில் 7 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு மட்டும் வெவ்வேறு குற்றச்செயலில் ஈடுபட்ட 7 பேரை கைது செய்ததாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஸ்ரீநிக சஞ்சீவ ஜயக் கொடி தெரிவித்தார்.

நீர்வேலி, கரந்தன், கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய பகுதிகளிலுள்ள வீதிகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய 5 பேரும் கோப்பாய் பகுதியிலுள்ள வீதியில் மதுபானம் அருந்தி விட்டு போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 2 பேரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொறுப்பதிகாரி கூறினார்.

இவர்களை இன்று யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (எ-6)

# ஆசிரியர் வெற்றிடத்தை விரைவில் நிரப்புங்கள்

(முல்லைத்தீவு)

மு/தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நிலவும் இரண்டு ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வித்தியாலயம் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி முதல் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இங்கு தரம் 1 தொடக்கம் 11 வரை 357 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

இவர்களில் தரம் 1முதல் 11 வரையான மாணவர்களுக்கு சிங்கள பாடத்திற்கான ஆசிரியரும் 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கான ஆசிரியரும் இன்மையால் மாணவர்கள் இப்பாடங்களை பயில்வதில்லை. இதனால் பரீட்சையில் அடைவு மட்டங்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் முல்லை வலய கல்விப் பணிப்பாளர் மா.இராஜகுமாருக்கு அறிவித்தும் இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

எனவே மேற்குறித்த பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க ஆவன செய்யுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# சிந்தனையின் துறவு



நம் வாழ்க்கையில் அவ்வப்போது நாம் எதைச் செய்வது என்ற ஒரு சிக்கல் வரலாம்; அல்லது பெருமளவிலான ஒரு மகிழ்ச்சியேகூட வரலாம். அந்தச் சிக்கலிலே அழுந்திவிடக்கூடாது. அல்லது அந்த மகிழ்ச்சியிலே அழுந்திவிடக்கூடாது. இந்தச் சிக்கலிலேயிருந்து விடுபடவேண்டிய வழி என்ன என்று நினைத்தாலே போதும். சிக்கலிலே தவித்துக் கொண்டிருக்கக்கூடிய மனம் முனையில் இருக்கிறது. அந்த மனதின் அடியிலே இறைவன் இருக்கிறான். அவன் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்குத் தயாராக இருக்கின்றான். அவன் பக்கம் திரும்புவதற்கு வழிகாணவேண்டும் என்று சொல்கின்றேன்.

சிந்திக்கின்றவர்கள் அதைக் காணுகின்றார்கள். சிந்தனைக்கு என்று திரும்பினாலே போதும், மற்றதையெல்லாம் அவன் பார்த்துக்கொள்வான். அதைத்தான் வள்ளுவர்கூட தனது குறள் ஒன்றில் ஒரு மனிதன் முயற்சி எடுத்தால் இறைவன் அவனை நோக்கிப் பத்து அடி எடுத்து வைக்கின்றான் எனக் குறிப்புத் தந்துள்ளார். அது உண்மைதான். இந்த உண்மையை நேரடியாக அனுபவபூர்வமாகப் பல இடங்களில் நான் உணர்ந்து இருக்கிறேன்.

# மார்ச் வரை வறட்சி நீடிக்கும்

(கொழும்பு)


நாடு முழுவதும் நிலவும் வறட்சியான காலநிலை எதிர்வரும் மார்ச் மாதம் வரை நீடிக்குமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

தென், மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அவ்வப்போது சிறிதளவு மழை பெய்த போதும் மார்ச் மாதம்வரை நாடு முழுவதும் போதியளவு மழை பெய்யலாமெனவும் வானிலை அவதான நிலையம் தெரிவிக்கின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன்சன் அபாரம்

# சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி அவுஸ்திரேலியா அபார வெற்றி



அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. அதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 397 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் மார்ஸ் 148 ஓட்டங்களையும் சிமித் 100 ஓட்டங்களையும் அதிகப்படியாக பெற்றுக்கொடுத்தனர்.

தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சில் ஸ்டெயின் அதிகபடியாக 4 இலக்குகளை வீழ்த்தினார்.

தனது முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 206 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் அதிகபடியாக ஏபி டிவிலியர்ஸ் 91 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஜோன்சன் மிகவும் சிறப்பாக பந்து வீசி 7 இலக்குகளைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸிற்க்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் வார்ணர் 115 ஓட்டங்களை அதிகப்படியாக பெற்றார்.


481 என்ற வெற்றி இலக்கை நோக்கி தனது 2ஆவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 200 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 281 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்காவின் 2ஆவது இனிங்ஸில் ஏபி டிவிலியர்ஸ் 48 ஓட்டங்களை அதிகபடியாக பெற்றார்.

அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில் முதல் இனிங்ஸைப் போலவே இரண்டாவது இனிங்ஸிலும் சிறப்பாக பந்து வீசிய ஜோன்சன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலியாவின்ஜோன்சன்தெரிவு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலிய அணி 1:0 என்ற நிலையில் முன்னிலையில் உள்ளது. (க)



# கும்பலை பாரதி வி.கழகம் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டி

அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச் சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகி இடம் பெறுகின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற போட்டிகளில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியும் மயிலிட்டி கண்ணகி அணியும் மோதுவதாக இருந்த போட்டியில் மயிலிட்டி கண்ணகி அணி சமூகம் தராமையால் பண்டத்தரிப்பு அறிவொளி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.


மற்றைய போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியும் மயிலிட்டி பாரதி அணியும் மோதின. இதில் 7:5 பழங்கள் அடிப்படையில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி வெற்றி பெற்றது.

மற்றைய போட்டியில் புதுமடம் வைகறை அணியும் மயிலிட்டி வள்ளுவர் அணியும் மோதின. இதில் 6:5 பழங்கள் அடிப்படையில் புதுமடம் வைகறை அணி வெற்றிபெற்றது.

இன்று இடம்பெறவுள்ள போட்டியில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி அணி மோதவுள்ளது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஆளுநர் வெற்றிக்கிண்ண சதுரங்க போட்டிமுடிவு



ஆளுநர் வெற்றிக்கிண்ண சதுரங்கப் போட்டியில் யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையை சேர்ந்த 8 வயது, 10 வயது, பிரிவில் பங்கு பற்ற மாணவர்களில் கா.மேரியசுயந்தா, ஜெலதுசன் ஆகியோர் சண்டிப்பாய் கோட்டமட்டத்தில் வெற்றிக் கிண்ணத்தையும் அ.மேரிசிந்துயா, ச.கிருஜிகன், ம.மபிசன் ஆகியோர் சான்றிதழ்களையும் பெற்று மாவட்ட மட்ப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். (க)

# வெற்றிக் கிண்ண உதைபந்து; ரெட்ரேஞ்சர்ஸ், விநாயகர் வெற்றி



வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக் கிடையிலான போட்டி கள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்று அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத் தில் இடம்பெறுகின்றன.

இதில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் அராலி ஏ.எல் அணியும் மானிப்பாய் ரெட்ரேஞ்சர்ஸ் அணியும் மோதின, போட்டி நேர நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பெறாமையால் சமநிலை உடைப்பு உதை வழங்கப் பட்டது. இதில் 3:1 என்னும் கோல்கள் அடிப்படையில் மானிப்பாய் ரெட்ரேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றது.

மற்றைய போட்டியில் அராலி திருமகள் அணியும் கல்வளை விநாயகர் அணியும் மோதின, இப் போட்டியும் ஆட்ட நேர நிறைவில் 0:0 என சம நிலையில் இருந்தமையால் சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் 4:2 என்னும் கோல் கணக்கில் கல்வளை விநாயகர் அணி வெற்றி பெற்றது. (க-23)

# யாழ்.பல்கலைக் கழகத்தை வீழ்த்தி கொக்குவில் கே.சி.சி.சி வெற்றி

ஜனுதாஸின் சகலதுறை கலக்கலிலும் ராகுலனின் துடுப்பாட்டத்தின் உதவியுடனும் சாம்பவனின் பந்துவீச்சும் உதவி செய்ய யாழ். பல்கலைக்கழக அணியையும் துவம்சம் செய்தது KCCC அணி.

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகத்தின் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிச்சுற்றில் KCCC அணி பல்கலைக்கழக அணியுடன் மோதியது.

இப் போட்டியில் பல்கலைக்கழக அணியை 60 ஓட்டங்களினால் தோற்கடித்து KCCC அணி வெற்றி பெற்றது.

ஏற்கனவே இவ் இரு அணிகளுமே இறுதிப்போட்டியில் எதிர்வரும் 23 ஆம் திகதி மோதுகிறது குறிப் பிடத்தக்கதாகும்.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய KCCC அணி 181 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ராகுலன் 52, ஜனுதாஸ் 41, வல்லவக்குமரன் 39 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 182 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய பல்கலைக் கழக அணி 121 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பந்துவீச்சில் சாம்பவன் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஜனுதாஸ், சிலோஜன், பவிதலா 2 விக்கெட டுக்களையும் கைப்பற்றினர்.(க-23)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி



மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி.ச.சிவகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் வலிகாமம் வலயக கல்வி பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதனும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி. செல்வகுமாரி சுப்பிரமணியம், கௌரவ விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க-23)

# தலைவர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட போட்டி



வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்று அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதியது.

இதில் 2:0 என்னும் கோல் அடிப்படையில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி வென்றது.

இன்று இடம்பெறவுள்ள போட்டியில் 3.15 க்கு குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் அராலி பாரதி அணியும் மோதவுள்ளன.

தொடர்ந்து சாவற்காடு மகாத்மா அணியும் மாதகல் சென் தோமஸ் அணியும் மோதவுள்ளன. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்விச் சேவையில் ஓர் கலங்கரை விளக்கு

செழுமை மிக்க தென்மராட்சிப் பிரதேசத்தின் கண்ணெனத் திகழும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வரலாற்றில், வளர்ச்சியில் தடம் பதித்து சேவையாற்றிய அமரர் காமாட்சி யோகேஸ்வரன் அவர்களது சேவையை இன்றைய தினம் நினைவு கூருவதில் மன நிறைவடைகின்றேன்.

"சமூகப் பொருத்தப்பாடுடைய பிரஜைகளை உருவாக்குவதே கல்வியின் நோக்கம்" என்பது கல்வியியலாளர்களது கருத்தாகும். இளம் தலைமுறையினரை வழிப்படுத்துவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். ஆனால் அவரவர் அறிவு, ஆற்றல், மனப்பாங்கு என்பவற்றுக்கேற்பவே அப்பணி சிறப்புற முடியும்.

இன்று மேலோங்கி நிற்கும் பரீட்சை மையக் கல்வியால் ஆளுமைமிக்க பொருத்தப்பாடுடைய சமூகத்தை உருவாக்கிவிடமுடியாது. கல்வி கற்போர் தொகை விரிவடைந்தபோதிலும், கல்விக் கூடங்களின் பௌதிக வளங்கள் உயர்வாகக் கிடைத்த போதிலும் இளம் தலைமுறையினரின் சீரழிவு நடவடிக்கைகள் அதிகரித்துக் கொண்டே போவதற்கான காரணத்தை நுணுகி ஆராய்வோமாயின் கல்வி முறைமையில் உள்ள குறைபாட்டினை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

முன்பிருந்த கல்வி அமைப்பு, அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர்களின் சேவை என்பன சமூக மேம்பாட்டிற்கு உதவியமையை மறுக்கமுடியாது. சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நீண்ட காலம் நற்பணி புரிந்த நல்லாசிரியர்



திருமதி காமாட்சி யோகேஸ்வரன்

ஒருவர் அமரத்துவம் அடைந்த நிலையில் அவரது சேவையினை மீட்டுப் பார்ப்பது குறிப்பாக நிகழ்காலத்து ஆசிரியர்கட்கும், ஓய்வுநிலையி லுள்ளோர்கும் பயனுடையதாக அமையும்.

திருமதி காமாட்சி யோகேஸ்வரன் அவர்கள் தமது 22வது வயதில் (1945ல்) ஆங்கில உதவி ஆசிரியராகப் பணியினை ஆரம்பித்து 60 வயது வரை ஒரே பாடசாலையில் பணிபுரிந்த பெருமை அவரையே சாரும். சுய இலாபங்கள், பதவி உயர்வுகளைக் கருத்தில் கொள்ளாது. தமது பாடசாலை, கற்கும் மாணவர்கள் அனைவரும் தமது பிள்ளைகள் என்ற உணர்வுடன் அவர்களது முன்னேற்றத்திலும் சமூக முன்னேற்றத்திலும் பாடசாலை வளர்ச்சியிலும் அக்கறையுடன் செயற்பட்டார். வறுமை காரணமாக இடைவிலகும் பிள்ளைகளை இனங்கண்டு அவர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருடன் தொடர்பு கொண்டு தேவையேற்படின் நிதி உதவி செய்து அவர்களின் கல்வியைத் தொடரவழி வகுத்த சந்தர்ப்பங்கள் பலவுள.

**திருமதி காமாட்சி யோகேஸ்வரன் அவர்களின் சேவையை நினைவுகூரும் வகையில் அவர்களின் 31-ஆவது நாளினை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

"ஆசிரியர்கள் ஞான விளக்குகள்" என்பதற்கமைய பல்லாயிரம் சுடர் விளக்குகளை ஏற்றிய அகல் விளக்காகத் திகழ்ந்தார். ஆங்கில ஆசிரியராக மட்டுமன்றி அனைத்து இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் உச்சப்பங்களிப்பினை நல்கியதால் அவர் ஆங்கில பாட ஆசிரியரா? கணித பாட ஆசிரியரா? சமயபாட ஆசிரியரா? விளையாட்டுத்துறை ஆசிரியரா? அல்லது மாணவர்களின் ஒழுக்கநெறி பேணி அவர்களை வழிப்படுத்துபவரா? என மாணவர்களால் இனங்காண முடியாதவாறு அனைத்துப் பணிகளிலும் பங்குகொண்டு சேவையாற்றி சகல மாணவர்களினதும் உயர் மதிப்பினைப் பெற்ற ஓர் உதாரண மாதுசிரோமணி என்றால் மிகையாகாது.

ஆங்கில ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சியினை 1949-ம், 1950-ம் ஆண்டுகளில் மகரகம ஆசிரிய கலாசாலையில் பயின்ற போது மொன்ரிசூரி அம்மையாரிடம் சொற்பகாலம் நேரடியாகக் கல்விபயிலும் வாய்ப்பும் கிட்டியது. ஆங்கிலத்தில் நிறைந்த சொல்லாட்சியும் எழுத்துப்பிழைகளின்றி எழுதும் திறனும் கைவரப்பெற்றிருந்தார்.

பரீட்சை மையக் கல்விக்கு உதவும் வகையில் வளர்ச்சிபெறும் தனியார் கல்வி நிறுவன நடவடிக்கைகளினால் பிள்ளைகளின் இயல்பான உடல், உள, சமூக வளர்ச்சிகள் பாதிக்கப்படுவதாகவும், முறைசாரா, முறைமையில் கல்விக்கான சந்தர்ப்பங்கள் மருவி வருவதாகவும், அவர்களின் இயல்பான வளர்ச்சிக்கு உதவும் வகையில் மாற்றங்கள் தேவை என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். தன்னிடம் வரும் மாணவர்கட்கு இறுதிக்காலம் வரை இலவசமாக கல்வி புகட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார். பரந்த நிலப்பரப்பைக் கொண்ட தனது வீட்டில் பயன்தரு மரங்களை நாட்டுவதிலும் அவற்றின் நாற்றுக்களை உற்பத்தி செய்து இலவசமாக வழங்கி மரநடுகையை ஊக்குவிப்பதிலும் ஆர்வமுடன் செயற்பட்டார்.

நிறைவான சேவை புரிந்து 1983-ம் ஆண்டு ஓய்வு பெற்ற போதிலும் இறைபதமெய்தும் வரை நல்லதோர் சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் ஆர்வம் கொண்டவராக, தேவையறிந்து உதவும் கொடையாளியாக, பாரம்பரியம் பேணுபவராக, அதேநேரத்தில் புதுமை புனைபவராக, சிறந்த சிந்தனையாளராக, நேரம் தவறாது பணிபுரிபவராக, துணிச்சல் மிக்கவராகத் திகழ்ந்துள்ளார். அவரது ஆத்மா நிச்சயம் உயர்பேறு பெறும் என்பதில் ஐயமில்லை.

*கு.சதாசிவமூர்த்தி (J.P)*
*ஓய்வுநிலை அதிபர், பலாலி*
*ஆசிரிய கலாசாலை,*

## இராணுவத்திடம்...

வேளை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் காணாமற் போனவர்களுக்கு இராணுவம்தான் பொறுப்புக் கூற வேண்டுமெனவும் ஆணைக் குழுவிடம் வலியுறுத்தினர்.

யாழ்.வேலணையைச்சேர்ந்த இளங்கோதை என்ற குடும்பபெண் ஒருவர் சாட்சியமளிக்கையில், எனது மருமகனான சின்னத்தம்பி பரமேஸ்வரன்(வயது-35) என்பவர் தனது குடும்பத்துடன் புதுக்குடியிருப்பு உலகளந்த பிள்ளையார் கோவிலடி முத்லாம் வட்டாரத்தில் வாழ்ந்து வந்தவர். சசிகலா எனது மகள். அவருக்கு வயது 30 இப்போது 35 இருக்கும். அவர்களின் மூன்று பிள்ளைகளான பிரதீபா, பிரதீபன், பிறையழகன் ஆகியோர் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

சரணடைந்த அவர்களை இராணுவம் ஓமந்தைக்கு பேருந்தில் அனுப்பிவைத்தது. இதேவேளை இராணுவத்தினர் ஓமந்தையில் எனது மருமகனை சேட்டில் பிடித்து இழுத்து சென்றது. இதன்போது கருணாகுழுவும் நின்றது. எனது மருமகனை இழுத்துச் சென்றபோது மகள் கத்திக்கொண்டு சென்றாள். எனது கணவரை விட்டு விடுங்கள் இல்லையேல் எங்களையும் சுட்டுவிடுங்கள் நாங்களும் செத்துப்போகிறோம் என்று அழுது புலம்பியுள்ளார். இதனை எனது மருமகனின் தம்பி முறையானவர் கண்டுள்ளார்.

ஆனால் இதற்குப்பின்புபல இராணுவ முகாமிற்கு சென்றோம். இல்லையென்று சொல்லுகின்றார்கள். இதேவேளை மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த முகாமிற்குள் எனது அக்காயிருந்தார். அப்போது அவர்பலரிடம் விசாரித்ததோடு பல முகாமிற்கும் சென்று பார்த்தார். ஆனால் அங்கும் இல்லை.

அத்தோடு நான் வவுனியா புனர்வாழ்வு முகாமிற்கும் சென்று பார்த்தேன் அங்கும் இல்லை. வவுனியாவில் எல்லாம் பார்த்தேன். எங்கும் இல்லை எனது மகளின் பிள்ளைகளை நான் அடையாளம் காட்டுவேன் ஆனால் காட்டுகின்றனர் இல்லை என்றார்.

இதன்போது குறுக்கிட்ட ஆணைக் குழுவினர் அவர்களுக்கு யாரேனும் எதிரிகள் உண்டா என்று கேள்வியெழுப்பினர். அதற்கு யாருமே அவர்களுடன் கோபமில்லை என்று பதிலளிக்க கருணா குழுவுடன் முரண்பாடு உள்ளதா? என்று மறுபடியுமொரு கேள்வியை ஆணைக் குழுவினர் எழுப்ப அவர்களுடனும் எந்தவித முரண்பாடுமில்லை என்று பதிலளித்தார்.

அதேவேளை இயக்கத்தில் இருந்து விலகியவர். அதுவும் அரசியல் பிரிவில் இருந்தவர். சண்டைக்கு செல்லவில்லை என்று குறித்த தாய் தெரிவித்தபோது விசாரணைக்கு எடுத்து செய்யக்கூடியதை செய்வோம் என்றனர் ஆணைக் குழுவினர்.

இதன்போது என்ர மகளின்ர சின்னப்பிள்ளைகளையாவது கண்டுபிடித்து தாங்கோ என்று மன்றாடினார். அதற்கு பதிலளித்த ஆணைக் குழுவினர் பிள்ளைகளை மீட்டுத்தருவோம் என்று வாக்குறுதியளித்தனர்.

மேற்படி சாட்சியம் இடம்பெற்ற போது அங்கு சமுகமளித்திருந்த யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உட்பட பலர் கண்ணீர்விட்டதை அவதானிக்க முடிந்தது.

ஜெயவதனி என்பவர் சாட்சியம் அளிக்கையில்,

முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் பகுதியில் 2009.5.17 அன்று எனது கணவருடன் ஒன்றாக வந்து இருந்தோம். இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டோம் அனைத்து விடுதலைப்புலிகளையும் பொறுப்பாளர்களையும் சரணடையுமாறும் சரணடைந்தால் பொதுமன்னிப்பு வழங்குவோம் என்றும் இராணுவத்தினர் ஒலிபெருக்கியில் அறிவித்தனர்.

வட்டுவாகலில்தான் அறிவித்தனர். இராணுவக்கட்டுப்பாடுதான். எனது கணவர் தான் இராணுவத்திடம் சரணடையப்போதாகவும் அத்தோடு தன்னுடன் தமிழீழவிடுதலைப்புலிகளின் பல பொறுப்பாளர்கள் சரணடையப்போவதாக தெரியப்படுத்தியதாகவும் எனது கணவர் என்னிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து குடும்பங்களுடன் சரணடைய போனோம். ஆனால் என்னுடன் புலிகளின் பொறுப்பாளர்களின் குடும்பத்தினரை திருப்பி அனுப்பிவிட்டனர் இராணுவத்தினர். அப்போது நான் பார்த்து கொண்டு நின்றேன். எனது கணவர் உட்பட விடுதலைப்புலிகளின் பொறுப்பாளர்கள் கடவுளின் சாட்சியாக அனுப்பட்ட கத்தோலிக்க அருட்தந்தை யோசப் பிரான்சிஸ் அவர்கள் முன்னிலையில் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். பிறகு அங்கிருந்து பேருந்துக்களில் ஏற்றிக்கொண்டு ஓமந்தை நோக்கி கொண்டு சென்றனர். ஓமந்தைக்கு கொண்டு செல்ல முன்பு நீண்ட நேரம் எனது கணவர் உட்பட பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை எனது கணவருடன் 50 பேருக்கு மேல் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டனர். மனித உரிமை ஆணைக்குழுவிடம் நேரடியாகவும் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு செயலாளரிடமும் எனது முறைப்பாடுகளை அனுப்பிவைத்தேன் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் சமர்கள ஆய்வுக்கு பொறுப்பாளராகயிருந்த யோகரட்ணம் யோகி மாஸ்டரின் மனைவி சாட்சியமளித்தார்.

அதேவேளை பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு இருந்தனர் என்றும் முள்ளிவாய்க்காலுக்கு தனது பிள்ளைகள் மற்றும் கணவருடன் வந்த மறுநாள் இராணுவத்தினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்புவழங்கப்படும் என்ற வாக்குறுதியை நம்பி தனது கணவர் சரணடைந்தார் என்றும் அவருடன் பலர் சரணடைந்தனர் என்றும் பாதுகாப்பு மொழிபெயர்ப்புக்காக கிறிஸ்தவ பாதிரியார் யோசப் பிரான்சிஸ் அவர்களுடன் சென்றார்.

நீண்டநேரம் பதிவுக்குபின்பு ஓமந்தையை நோக்கி பேருந்தில் பயணித்ததை கண்டேன். பல ஆயிரக்கணக்கான போராளிகள் இராணுவத்திடம் தான் சரணடைந்தனர் . அதில் பலர் புனர்வாழ்வின்பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் எனது கணவர் விடுதலைசெய்யப்படவில்லை. நான் அறிந்தவரை இராணுவத்தினரிடம் 11 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சரணடைந்ததாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். அதில் எனது கணவரும் ஒருவர்.

உயிர்களைப்பாதுகாக்கதான் இராணுவத்தை பயன்படுத்தியதாக அரசு கூறியது. அதன்படி எனது கணவரும் பாதுகாக்கப்படுவார் என்று நான் நம்புகின்றேன். நல்லிணக்க ஆணைக்குழுவிடம் 2010ம் ஆண்டு சாட்சி அளித்தேன். ஆனால் மூன்று வருடமாகியும் எந்தப்பதிலும் இல்லை.

தற்போது நாட்டில் பல அபிவிருத்தியைச்செய்து கொண்டிருக்கும் இந்த அரசுதான் எங்களுக்கு வலியை ஏற்படுத்தியது. இந்த அரசின் காலத்திலேயே எமக்கு நல்ல பதில் கிடைக்கவேண்டும் என்றும் ஆட்சியிலுள்ளவர்களின் மனங்கள் மாறி நாம் கூறும் உண்மைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவே எமது வேண்டுகோள். இவ்வாறு பலர் தமது சாட்சியங்களை கண்ணீருடன் ஆணைக் குழுவிடம் முன்வைத்தனர்.

பலர் மீது குற்றச்சாட்டு

தமது உறவுகள் காணாமற்போக இராணுவத்தினர் ,கருணா குழுவினர், ஈழமக்கள் ஜனநாயககட்சியினர், வெள்ளைவானில் வந்தவர்கள் என்று தமது குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டுசென்றனர். நேற்றைய தினம் சாட்சியமளிக்க வருகைதந்த காணாமற்போனவர்களின் உறவினர்கள். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தபின்பு முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதியில் பலர் குடும்பத்துடன் காணாமற்போனதாகவும். வீதிகளில் பேருந்துகளில் சென்றுகொண்டிருந்தபோது இராணுவச்சோதனைச்சாவடிகளில் இறக்கி சோதனை செய்த போது தமது பிள்ளைகளை இராணுவத்தினர் கைதுசெய்து கொண்டுசென்றதாகவும் சாட்சியமளித்தனர்.

பிள்ளைகளை பிடித்துக்கொண்டு சென்றபோது தாம் அவர்களைவிடுமாறு கத்திக்குளறிக்கொண்டு பின்னால் சென்றதாகவும் இதன்போது இராணுவத்தினர் தங்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டு பயமுறுத்தியதாகவும் கூறினர். இதேவேளை நள்ளிரவு வேளைகளில் அத்துமீறி ஆயுதங்களுடன் நுழைந்தவர்கள் வெள்ளைவான்களில் கொண்டு சென்றதாகவும். கருணா குழுவினரும் ஈ.பி.டி.பியினரும் தமிழ் இளைஞர்களை கைதுசெய்து கொண்டு சென்றதாகவும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்தனர் உறவினர்கள். (எ-6)

## வெள்ளை வானில்...

இதன்போது ஆணைக்குழு வின் விசாரணையில் சாட்சியமளித்த வயோதிபத் தாயொருவர் கூறுகையில்,

எனது மகனின் பெயர் ஜெயகாந்தன் கடந்த 2007 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 2 ஆம் திகதி அதி காலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியிலுள்ள வீட்டில் வைத்து வெள்ளைவானில் வந்தவர்களினால் கடத்தி செல்லப் பட்டார்.

எனது வீட்டு யன்னல் கம்பியை உடைத்துக்கொண்டு அவர்கள் எனது வீட்டுக்குள் வந்தார்கள். அவர்களிடம் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களும் இருந்தன. ஆனால் அவர்கள் சிவிலுடையில்தான் வந்தனர். அதில் 10 பேருக்குமேல் வந்திருந்திருந்தனர். அதன் பின்பு எனது மகன் இராணுவத்தினரின் பீல் பைக் குறூப்பில் இராணுவத்தினரின் சீருடையில் சென்றதைக் கண்டேன்.

அதில் சிலர் கொச்சைத்தமிழிலும் மற்றையவர்கள் நன்றாக தமிழிலும் பேசினார்கள். எனது மகனுக்கு விடுதலைப்புலிகளுடன் எந்தத் தொடர்புமில்லை.

இதன்பின்பு நேரடியாக பலாலி வீதியில் பீல்பைக்குறூப்புடன் கண்டேன். கறுப்பு ஹெல்மட் போட்டிருந்தார் இருப்பினும் எனது மகனை நான் அடையாளம் கண்டேன்.

அதேவேளை கடந்த வருடமும் அதாவது 2013 ஆம் ஆண்டும் எனது மகனை பீல்பைக் குறூப்பில் இராணுவ சீருடையில் சென்று கொண்டிருந்த போது இரண்டாவது தடவையாக பலாலி வீதியில் கோண்டாவில் பகுதியில் இராணுவத்துடன் கண்டேன்.

அவன் எனது மகன்தான். நான் அவனை அடையாளம் கண்டேன் ஆமியுடன்தான் கண்டேன். வெள்ளைவானில் பிடித்து கொண்டு சென்ற 6 ஆம் மாதம் கண்டேன். அதாவது 2008 ஏப்பரல் மாதம் கண்டேன்.அப்போதும் இராணுவத்துடன்தான் கண்டேன். என்று ஆணித்தரமாக சாட்சியமளித்தார்.

இதேவேளை பீல்பைக் குறூப்பில் உங்கள்மகனுடன்சென்ற இராணுவத்தினரைக்கண்டால் அடையாளம்காட்டுவீர்களா? என ஆணைக் குழுவினரால் கேள்வி எழுப்பப் பட்டது.

இதற்கு பதிலளித்த அந்த வயோதிபத்தாய், எனக்கு என்மகனைத் தவிர வேறு யாரையும் அடையாளம் காட்ட முடியாது. இராணுவம் வைச்சிருக்கும் எனது மகனை மீட்டுத்தாருங்கள் என மன்றாட்டமாக ஆணைக்குழுவிடம் வேண்டுகோள்விடுத்தார்.

அதேவேளை தனது இரண்டு பெண் பிள்ளைகளுடன் மிகவும் கஷ்டப்படுவதாகவும் வெள்ளை வானில் கடத்தப்பட்ட மகனை மீட்டுத்தருமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (எ-6)

## தி.மு.க...

மொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் தமிழக மீனவர்களை பாதுகாக்க இலங்கை அரசுடன் இந்திய மத்திய அரசே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் இந்தியாவில் தூக்குத் தண்டனையை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று கோரியும் இந்த மாநாட்டின் போது தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

மேற்படி தீர்மானங்கள் உள்ளடங்கலாக 15 தீர்மானங்களை தி.மு.கவினர் இந்த மாநாட்டின் போது நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச போர்க்குற்ற விசா...

திகதிவரை காலஅவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

தீவிர ஆலோசனைகளுக்கப் பின்னர், இலங்கை வெளிவிவகார அமைச்சு ஒவ்வொரு குறிப்புக்கும் பதிலளித்து, தயாரித்த அறிக்கை, ரவிநாத் ஆரியசிங்க மூலம் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் வரும் மார்ச் 3-ம் திகதி ஆரம்பிக்க சில நாட்கள் முன்னதாக, நவநீதம்பிள்ளையின் அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படவுள்ளது.

எனினும், இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையின் முக்கிய அம்சங்களை கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

அதன்படி, இலங்கையில் இடம்பெற்ற அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கும், எந்தவொரு உள்நாட்டு செயல்முறைகளை கண்காணிப்பதற்கும், அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய சில விடயங்கள் குறித்தும் பட்டியலிடப்பட்டுள்ளன.

❖ வெறுப்பைத் தூண்டுதல், சாடசிகளைப் பாதுகாத்தல், தகவல் உரிமை, பலவந்தமாக காணாமற்போதல் குற்றங்கள் போன்றன குறித்த தற்போதுள்ள சட்டங்களை மீளாய்வு செய்து, அனைத்துலக மனித உரிமை சட்டத்தின் தரத்திறகு கொண்டு வரவேண்டும்.

❖ பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, தன்னிச்சையாக தடுத்து வைப்பதற்கான விதிமுறைகளை நீக்க வேண்டும்.

❖ சிறுபான்மை சமூகத்தினர், ஊடகங்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சாட்சிகள் மீதான தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும்.

❖ அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய புதைகுழிகள் உள்ளிட்ட, மனிதஉரிமை மற்றும்மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து அனைத்துலக உதவியுடன், சுதந்திரமான, நம்பகமான குற்றவியல் மற்றும் தடயவியல் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

❖ அனைத்துலக தரத்துக்கேற்ப விரிவான, அணுகுமுறையின் ஒரு பகுதியாக, இடைக்கால நீதியை வழங்கும் விதத்தில், தேசிய இழப்பீட்டுக்கொள்கையை உருவாக்குவதற்கு உண்மை கண்டறியும் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும்.

❖ காணாமற்போனவர்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, தீவின் அனைத்துப் பகுதிகளிலும் காணாமற்போனவர்கள் குறித்தும், காணாமற்போதல்கள் நிகழ்ந்த எல்லாக் காலங்களிலும் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தும் விசாரிக்கும் வகையில், அதன் விசாரணை இலக்கை விரிவுபடுத்த வேண்டும்.

காத்திரமான பரப்புரைகளின் மூலம், பொதுமக்களுக்கு இதுபற்றித் தெரியப்படுத்தி, எல்லா முறைப்பாட்டாளர்களினதும், முறைபாடுகளை சமர்ப்பிக்க போதிய காலஅவகாசம் வழங்க வேண்டும்.

❖ இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் இறுதி அறிக்கை, 2006-ம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை என்பனவற்றை பகிரங்கப்படுத்தி, அண்மையில் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் அந்த சான்றுகளை மதிப்பீடு செய்ய அனுமதிக்க வேண்டும்.

❖ படைக்குறைப்பு மேலதிக நடவடிக்கைகளை எடுத்து, அமைதக்கால மட்டத்திற்கு படைத் தலையீட்டைக் குறைப்பதற்கு அர்த்தமுள்ள, வெளிப்படையான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும், படைக்கலைப்பு, ஆயுதக்களைவு, பொதுமகளின் செயற்பாடுகளில் இருந்து விலகுவதற்கு தெளிவான கால எல்லையை வகுக்க வேண்டும்.

❖ நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை, இன்னும் முழுமையாக, செயற்படுத்துவது குறித்து சிவில், சமூக மற்றும் சிறு பான்மை பிரதிநிதிகளுடன், கலந்தாலோசிக்க வேண்டும்.

❖ நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தும் ஒரு தேசிய நினைவு நாளை அனுஷ்டிப்பதுடன், எல்லா பொதுமக்களும், தனியாகவோ குழுவாகவோ, நினைவு கூரும் உரிமையை வழங்க வேண்டும், போரில் கொல்லப்பட்டவர்களுக்கு பொருத்தமான நினைவுச் சின்னங்களை அமைப்பது குறித்து தேசிய அளவில் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும்.

❖ ஐ.நா மனிதஉரிமை ஆணையாளரின் தொழில்நுட்ப உதவியை ஏற்பது குறித்து சாதகமான கருத்தை வெளிப்படுத்த வேண்டும்.

❖ பலவந்தமாக காணாமற்போனவர்கள் குறித்த பணிக்குழு மற்றும் சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான சுதந்திர நிபுணர் உள்ளிட்ட, சிறப்பு ஆணையாளர்களுக்கு 2014ம் ஆண்டில் அழைப்பு விடுக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தரவுகளடங்கிய நவநீதம்பிள்ளையின் அறிக்கை கசிந்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது. (எ-6)

# ஆங்கிலேயர் ஆட்சி முதல்...

யில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தில் தமிழ்மக்களுக்கு நன்மை அளிக்கத்தக்க வகையில் என்னென்ன விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது உட்பட பல முக்கிய தீர்மானங்கள் இநதக் கூட்டத்தில் நிறைவேறறப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் நடைபெற்றதும் நடைபெற்றுக்கொண்டிருப்பதும் இன அழிப்பு என்பது தெளிவாக ஜெனிவா தீர்மானத்தில் கூறப்பட்டிருக்க வேண்டும் என்றும் இந்த இன அழிப்பை உள்ளடக்கியதாக பக்கசார்பற்ற சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் கூறினார்.

வெறுமனே போர் நடைபெற்ற கடைசி மூன்று வருடங்களில் நடைபெற்றவைகளை மட்டும் விசாரணை செய்வதாக அல்லாமல் ஆங்கிலேயர் இந்த நாட்டில் இருந்து வெளியேறிச் சென்றது முதல் இன்று வரையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்கள் தொடர்பில் இந்த விசாரணை நடத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றத்தக்க வகையில் ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கான சர்வதேச பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பது உட்பட மொத்தம் நான்கு தீர்மானங்கள் இந்த பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கஜேந்திரகுமார் கூறினார். (எ-6,266)

# இராணுவம் கொண்டு சென்ற...

எழுப்பியிருந்தார்.

எனதுமகனை என்கண்முன்னே தான் பச்சை பிக்கப்பில் நல்லூர் அரசடி இராணுவ முகாமில் வைத்து ஏற்றிச் சென்றனர். இவ்வாறு இருக்க எப்படி என் மகனை நீங்கள் காணாமல் போனவர் என்று கூறுவீர்கள்.

எனது மகன் சுதன் கட்டாரில் இருந்து வீட்டுக்கு திருமணம் முடிப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு திரும்பியிருந்தார். அதன்படி அவருக்கு திருமணமும் முடிந்தது.

கடந்த 2006.10.25 அன்று மகன் வீட்டில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் போது நல்லூர் அரசடி இராணுவ முகாமில் மறித்து சோதனை செய்தனர். அதன்போது இருவர் என்மகனை பிடித்துள்ளனர்.

அதனை கண்ட ஒருவர் என்னிடம் வந்து தெரிவித்தார். உடனே நான் அங்கு சென்றேன் என் கண் முன்னே அருகில் இருந்த பாவனையற்ற கடைக்கட்டடத்திற்குள் இழுத்துச் சென்றனர்.

நான் உடனடியாக வீட்டிற்கு தகவல் தெரிவித்துவிட்டு அவர்களை மனித உரிமை ஆணைக் குழு மற்றும் ஈ.பி.டி.பியினருக்கு அறிவிக்குமாறு அனுப்பினேன்.

எனினும் அவர்கள் போய் முறையிட்டும் குறித்தவர்கள் தமது உயிருக்கு அச்சுறுத்தல் என்று கூறி சம்பவ இடத்திற்கு வரவில்லை. இருப்பினும் தகவலை வழங்குமாறு தெரிவித்தனர். நாங்கள் மதயம் 1.30 மணி வரை குறித்த இராணுவ முகாமற்கு அருகிலேயே நின்றோம்.

ஆனால் என்னை அவர்கள் நிற்க வேண்டாம் என்று அடித்தார்கள். அதன் பின்னர் சிறிது நேரத்தில் பசசை நிற பிக்கப்பில் எனது மகனை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றனர்.

எல்லா இராணுவ முகாமுக்கும் போய் தேடினோம். அவர்கள் இல்லை என்று கூறிவிட்டனர். ஆனாலும் பின்னர் மாலை 4 மணியளவில் கல்வியங்காட்டில் மகனை இராணுவ வாகனத்தில் கூட்டி வந்து வீடுகளை சோதனையிட்டுள்ளனர்.

தொடர்ந்து 31ஆம் திகதி மாநகர சபைக்கு முன்னால் இராணுவ சீருடையுடன் எனது மகனைக் கொண்டு வந்து வீதியில் இறக்கி விடப்பட்டு போய் வருபவர்களை சோதனையிடவும் வைத்தனர்.

பின்னர் எந்தவித தகவலும் இலலை. பத்திரிகை ஒன்றில் வெளி வந்த புகைப்படத்தின் ஊடாக எனது மகன் சிறைச்சாலையில் இருப்பதை அறிந்தேன்.

அங்கு சென்று பார்க்கும் போது எனது மகனது பெயரில் 3 பேர் உளளனர் என்றும் அதில் உங்கள் மகன் இல்லை என்றும் கூறி அனுப்பிவிட்டனர். எல்லா இடமும் தேடிவிட்டேன் இதுவரை தகவல் இல்லை.

எங்கும் என் மகன் இல்லை என்றால் சிறைச்சாலையில் இருந்த என் மகனுக்கு என்ன நடந்தது என்றும் கேள்வியுடன் சாட்சியப் பதிவுகளை அவர் முன்வைத்தார். (எ-6)


## சிறுகதைத் தொகுதிக்கு ஆக்கங்கள் கோரல்

திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் வட மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களுடைய சிறு கதைகள் அடங்கிய ஒரு தொகுதியை வெளியிட முன்வந்துள்ளது.

ஏற்கெனவே நூலுருப் பெறாத சிறுகதைகளை மார்ச் 15ஆம் திகதிக்கு முன் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

செயலாளர்
திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்,
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 790 4941
மின்னஞ்சல் :- thisaikalaiyarl@gmail.com
(C-6532)

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- கண்ணா
4 1/2 ரக்ரர் - 19000/- 0777 590 792
(C-6530)

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்



WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-6528)

## தரம் 4,5 புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த .........

### புலமை விளக்கம் மாதிரி வினாத்தாள் தொகுப்பு
### ஆசிரியர் :- N.சுந்தா (Dip.in.Teaching Primary (Spl)

வெளிவந்துவிட்டது
2014, 2015 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சுயமாகவே கற்று வினாத்தாள் I இல் 100 புள்ளிகள் பெறுவதற்கான உத்தரவாத மாதிரிவினாத்தாள் தொகுப்பும் DVD யும் விற்பனையாகிறது.

10 மாதிரி வினாத்தாள்களும் + DVD மூலம் 15 மணிநேரம் வீடியோ ஊடான விளக்கமும் = 400 /- மட்டுமே

Note :-
இவ் வினாத்தாள் தொகுப்பினைகற்று 2014 ஆகஸ்ட் 17 ஆம் திகதியும், 2015 ஆகஸ்டிலும் புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகள் பெறத்தவறின் பணம் முழுமையாக மீளளிக்கப்படும்.

கிடைக்கும் இடங்கள் :-
18.02.2014 இல் இருந்து :- பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு.
அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம். சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - நெல்லியடி.

தபால் மூலம் நேரடியாகப் பெற்றுக்கொள்ள :- 077 899 9940
(மூன்று நாட்களுக்குள் கிடைக்கும் வகையில் தபாலில் அனுப்பப்படும்)
(6529)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org